# சுதந்திரன்
SUTANTIRAN



வள்ளுவர் ஆண்டு 2008
ஆடி 30
ஷஃபான் பிறை 28
ஞாயிறு (14-8-1977)
நிறுவியது 1947
புத்தகம் 31
இதழ் 22
தொலைபேசி: 23411
விலை சதம் 60


**"SRI LANKA; TROUBLE IN TAMILLAND" - 'சிறீலங்கா; தமிழ் மண்ணில் குழப்பம்' என்ற தலைப்பில் நியூஸ் வீக்' (NEWSWEEK) என்ற அமெரிக்க ஆங்கில வார இதழ் தேர்தலுக்குப் பின்னர் தனது 8-8-77 இதழில் எழுதியிருந்த கட்டுரையின் தமிழாக்கம் வருமாறு:-**

# 'தனிநாடு நிறுவுவதில் இலங்கை தமிழர்கள் உறுதியுடன் செயற்படுகின்றனர்!'

## ஜே.ஆர். மீது அவர்களுக்கு நம்பிக்கையில்லை

### 'நியூஸ் வீக்' ஏட்டின் அரசியல் விமர்சனம்!

திருமதி சிறிமாவோ பண்டாரநாயகாவுடன் தேர்தல் களத்தில் சென்ற மாதம் மோதிய யூனியஸ் றிச்சார்ட் ஜெயவர்த்தன அவர்கள், இலங்கையின் பிரதமர் பதவியை கைப்பற்றியதுடன் 168 இடங்களைக் கொண்ட இலங்கையின்தேசிய அரசுப் பேரவையில், 139 இடங்களைக் கைப்பற்றிக் கொண்டார். இவ்வளவு தூரம் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு மக்களின் கட்டளை கிடைத்துள்ளபோதிலும், அவர் தனது அரசியல் கப்பலை குழப்பங்களின் மத்தியில்தான் செலுத்தவேண்டியவராக இருக்கிறார்.

பெரும்பான்மை சிங்கள மக்களினால் தாம் பாரபட்சமாக நடத்தப்படுவதாக குற்றம் சுமத்தும் இலங்கையின் 30 லட்சம் தமிழ் மக்கள் கொழும்பு அரசாங்கத்திடமிருந்து பூரண சுதந்திரத்தை கோரி நிற்கிறார்கள். தமிழர்களின் கட்சியாகிய தமிழர் விடுதலைக்கூட்டணி 17 உறுப்பினர்களுடன் புதிய தேசிய அரசுப்பேரவையில் மிகப் பெரிய எதிர்க்கட்சியாக மிளிருகிறது. திரு, ஜெயவர்த்தனவுக்கு ஏராளமான தொல்லைகளைக் கொடுக்க தமிழர் விடுதலைக் கூட்டணி திட்டங்களை உருவாக்கிவருகிறது. இலங்கையிலிருந்து "நியூஸ் வீக்" பத்திரிகையின் நிருபர் பாரிகேம் அவர்கள் இலங்கைத் தமிழர்களின் பிடிவாதம் பற்றி எழுதியிருக்கிறார்.

யாழ்ப்பாணத்தின் கிராமப்புறமொன்றில் இலங்கைத் தமிழர்களின் பழம் பெரும் கலாசாரத்துக்கு அமைய, புதிய வெண்கலச் சிலையொன்று அண்மையில் நிறுவப்பட்டுள்ளது. ஒரு புரட்சி இளைஞனின் சிலை அது. தன் கைவிலங்கை அவன் உடைத்தெறிகின்ற காட்சி அது. அந்தச் சிலை சிவகுமாரன் என்ற இளைஞனின் நினைவாக நிறுவப்பட்டுள்ளது. இந்தச் சிவகுமாரன் எனும் 17 வயது இளைஞன் தனது புரட்சி நடவடிக்கைகளுக்காக சிங்கள பொலிசாரால் தேடப்பட்டுவந்த சமயம் அவர்களது கைகளில் அகப்படாமல் நஞ்சு அருந்தி உயிர் நீத்தவன்.

சிவகுமாரனை ஒரு உதாரண வீரனாகக் கொண்டுள்ளதிலிருந்து தமிழ் உணர்ச்சி எவ்வளவு வைராக்கியமாக இருக்கிறதென்பது தெளிவாகிறது. சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையே பல நூற்றாண்டுகளாகப் பகைமை இருந்துவந்துள்ளபோதிலும், பண்டாரநாயகா அரசாங்கங்களின்கீழ் தமிழர்கள் பாரபட்சமாக நடத்தப்பட்டதுதான், தமிழுணர்ச்சியை ஒரு புதிய பாதைக்கு தள்ளியுள்ளது.

இன்று பயங்கர இனக்கலவரம் ஒன்றை இலங்கை எதிர் நோக்குகிறது; இத்தகைய கலவரம் ஏற்படுமானால், அது இலங்கைத் தீவை இரண்டாக பிளவுபடுத்துவது நிச்சயம்!

தமிழர்களின் கண்ணோட்டத்தின்படி, அவர்களது பிரிவினைப் போராட்டம் இறுதியானது. 100 இலட்சம் சிங்கள மக்களினால் தமது மொழி கலாசாரம் தனித்துவம் அழிந்துபடாதிருக்க இதுவே இறுதிமுடிவு என்று தமிழர்கள் கருதுகின்றனர்: பிரிட்டிஷ் குடியேற்ற ஆட்சியின் கீழ்கடின உழைப்பும் கல்வியும் கொண்ட தமிழர்கள், இராணுவத்திலும், பொலிசிலும், அரசசேவையிலும் வர்த்தகத்திலும் முக்கிய பங்கு வகித்தார்கள்.

சுதந்திரம் கிடைத்த பின்னர், சிங்களவர்கள் அரசியல் பொருளாதாரதுறைகளில் தங்கள் பங்கினை கேட்கத் தொடங்கினர். ஆனால் திருமதி பண்டாரநாயகாவோ, மேலும் ஒருபடி சென்றார். 1972ம் ஆண்டு அவர் சிங்களத்துக்கு அரசியல் சட்ட அந்தஸ்து கொடுத்தார். அரசாங்கவேலைகளுக்கு சிங்களத்தை மட்டும் உத்தியோக மொழியாக்கினார். தமிழ் மாணவர்களின் உயர் கல்வி, பொருளாதார வாய்ப்புக்களை முற்றாகக் கெடுத்தார்,

தமிழர்களின் மரபு வழித் தாயகமான வடக்கு கிழக்கு மாநிலங்களில் குடியேற விரும்பிய சிங்களக் கள்ளக் குடியேற்றக்காரர்களுக்கு நிதி உதவியும் தாராளமாக வழங்கப்பட்டது.

தமிழ்த் தலைவர்கள் தமது செயல்திட்டம்பற்றிவெளிப் படையாகவே பேசுகிறார்கள். "நாங்கள் எங்கள் சொந்த நாட்டிலேயே இரண்டாந்தர குடிமக்கள் ஆக்கப்பட்டு விட்டோம்!" என்று தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர்களில் ஒருவரும் அண்மையில் தேசிய அரசுப்பேரவைக்குத் தெரிவு செய்யப்பட்டவருமான திரு. மு. சிவசிதம்பரம்தெரிவித்தார். ஜெயவர்த்தன நிலைமையைச் சீர்செய்வார் என்பதில் தமிழர்களுக்கு நம்பிக்கை கிடையாது. அதன் காரணமாக தமிழர் விடுதலைக்கூட்டணி (தமிழ் ஈழ) சுதந்திர பிரகடனம் செய்வதற்கு தன்னைத் தயார்படுத்தி வருகிறது. துறைமுக வளம்

—8-ம் பக்கம் பார்க்க

# தமிழினம் - தனித் தேசிய இனம்
# தமிழ் ஈழம் - ஒரு தனி நாடு!

## அரசின்கொள்கைத் திட்டத்துக்கு தமிழர் கூட்டணியின் திருத்தம்

குடியரசுத் தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட அரசாங்கத்தின் கொள்கைத் திட்டக் கூற்றுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி கொண்டு வந்திருக்கும் திருத்தப் பிரேரணையில் தமிழ் இனம் சுயநிர்ணய உரிமையுடைய ஒரு தனித்தேசிய இனம் என்பதும் சுதந்திரத் தமிழ்ஈழம் அமைப்பதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு மக்களாணை கிடைத்துள்ளதென்பதும் திட்டவட்டமாக வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அத் திருத்தப் பிரேரணை வருமாறு:—

"அரசாங்கத்தின் கொள்கைத்திட்டக் கூற்றினை ஏற்றுக்கொள்ளும் பிரேரணைக்கு திருத்தமாக கீழ்க்காணும் சொற்களை அதன் இறுதியில் சேர்த்துக்கொள்ளவும்:—

குடியரசுத் தலைவர் அவர்களால் விடுக்கப்பட்ட அரசாங்கக் கொள்கை விளக்கக் கூற்று ஒரு புதிய குடியரசின் அரசியலமைப்பை வரைந்து அங்கீகரித்துச் செயற்படுத்துவதற்கென அரசாங்கத்திற்கு அளிக்கப்பட்ட மக்களாணையைப் பற்றிக் குறிப்பிடும் நேரத்தில், ஓர் சுதந்திர இறைமையுள்ள, மதச்சார்பற்ற சமதர்மத் தமிழ்ஈழக் குடியரசை மீள்வித்துப் புனரமைப்புச் செய்

— 5-ம் பக்கம் பார்க்க

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




த. ஸ்ரீதரன்
சாவகச்சேரி

கே: தமிழர் விடுதலைக் கூட்டணியின் அடுத்த கொள்கை என்ன?

ப: என்றும் கூட்டணிக்கு ஒரே கொள்கைதான்! அது தனிநாடு அமைத்திட உழைத்தலே!

ஃ

தவன்
குருமண்வெளி

கே: இயக்கத்தை தூய்மைப்படுத்தி — வேகப்படுத்தி எழுச்சி கொள்ள வைக்க இடங்கொடாத இனத்துக்காக இனிமேலும் சிறைக்கதவுகளுக்குப் பின்னால் சென்று பலகோடி துன்பப்படவேண்டுமா?

ப: இயேசுவையும், நபியையும், காந்தியையும் சமுதாயம் கல்லால் அடித்த போதும், சிலுவையில் அறைந்தபோதும் அவர்கள் சமுதாயத்தை வெறுக்கவில்லையே! மேற்கண்ட உலகைத் திருத்திய உத்தமர்களின் வழியில் நடப்பவர்களும் சமுதாயத்தின் சிறுபிள்ளைத் தனத்தைக்கண்டு கண்ணீர் வடித்து, அதை திருத்த தொடர்ந்து முயற்சிப்பார்களே தவிர, சமுதாயத்தைத் திட்டிவிட்டு ஒதுங்கிவிட மாட்டார்கள்?

ஃ

க. தவராஜா
ராஜா லோன்றி
கொக்குவில் சந்தி

கே: வட்டுக்கோட்டை மாநாட்டிற்கு கூட்டணித் தலைவர்களில் ஒருவரான மறைந்த திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் நேரடியாக சமூகம் கொடுத்தாரா? அல்லது மலேசியாவில் நின்று தந்தி மூலம் ஆதரவு அளித்தாரா?

ப: சுகவீனமாகக் கொழும்பில் படுக்கையிலிருந்த ஜீ ஜீ. அங்கிருந்து தொலைபேசி மூலமாகவும் தந்தி மூலமும் கூட்டணித் தீர்மானத்துக்கு தமது இணக்கத்தை தெரிவித்தார்.

ஃ

மு. பராபரசிங்கம்
ஆலங்குளம்
சண்டிலிப்பாய்

கே: நான் தேர்தல் சமயத்தில் வெளியிட்ட துண்டுப் பிரசுரமொன்றை இத்துடன் அனுப்புகிறேன். எனது இந்த துண்டுப் பிரசுரத்துக்கு எதிராக தனி நபரோ அரசாங்கமோ சட்ட நடவடிக்கையெடுக்க முடியுமா?

ப: குறித்த உங்களது துண்டுப்பிரசுரத்தில் தனி நபர் யாரையும் நீங்கள் தாக்கவில்லை; முந்திய அரசாங்கத்தையே தாக்கியிருக்கிறீர்கள்; அதுவும் அதில் கூறப்பட்ட தனைத்தும் உண்மை; உங்கள் மீது சட்ட நடவடிக்கையெடுக்க விரும்பினாலும் முந்திய அரசாங்கம்தான் அவ்வாறு எடுக்க முடியும்; அதுதான் இன்று முற்றாக அழிக்கப் பட்டுவிட்டதே! எனவே உங்கள் மீது யாரும் சட்ட நடவடிக்கையெடுக்க முடியாது! கவலை வேண்டாம்!

ஃ

இராமலிங்கம்
கொழும்பு

கே: நடைபெற்ற பொதுத்தேர்தலில் தமிழ் மக்கள் அளித்த தீர்ப்பு பற்றி உங்கள் கருத்து என்ன குயுக்தியாரே!

ப: வடக்கு, அரசியலில் இருந்த அழுக்கு அகற்றப் பட்டு களைகள் பிடுங்கப்பட்டு, சுதந்திரப் பயிர் வளர்வதற்கு ஏற்ற பூமியாக்கப்பட்டுவிட்டது; அந்த அளவுக்கு கிழக்கு இன்னும் முற்றாக வெளிக்கவில்லையே என்பதுதான் எனது மனக்குறை! பொத்துவில் தொகுதி அந்தக் குறையை நிச்சயம் போக்கடிக்கும் என்று நம்புகிறேன்.

கே: தமிழ்ஈழக் கொள்கையை தமிழ் மக்கள் அங்கீகரிக்கவில்லையென்று இன்னும் கூறுபவர்களை பற்றி என்ன கூறுகிறீர்கள்?

ப: அரசியல் மூடர்களைப் பற்றி நான் சொல்ல என்ன இருக்கிறது? வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள 18 தமிழ் தொகுதிகளில் எழுபத்தேழு சதவீதமான தமிழ் மக்கள் தமிழ்ஈழக் கொள்கைக்கு ஆதரவாக வாக்களித்திருக்கும் போதும் அதை ஏற்காமல் குதர்க்கம் பேசுபவர்கள் நிச்சயம் தமிழ் சமுதாயத்தின் புல்லுருவிகளே!

ஃ

மு. கருணாநிதி,
ஏழாலை

கே: எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்தைப் பற்றி திருமதி ஸ்ரீமாவோ அம்மையார் என்ன நினைக்கிறார்?

ப: என்னால் சிறையிலே தள்ளப்பட்டவர், இன்று சபையிலே பிரதமருக்கு அடுத்த இடத்தைப் பிடித்து விட்டாரே என்று ஏங்குவார்!

கே: என். எம். கொல்வின் பீட்டர்! ஆகிய மும்மூர்த்திகளும் தற்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?

ப: ட்ராஸ்கியையும், லெனினையும், ஏங்கெல்சையும் புரட்டிப் புரட்டிப்படித்து தங்களது தோல்விக்கான காரணத்தை ஆராய்ந்து கொண்டிருக்கிறார்களாம்.

கே: தந்தை செல்வா, ஜீ. ஜீ. திருச்செல்வம், ஆகிய மூவரும் இன்று இருந்திருந்தால் தமிழ் மக்கள் நிலை எப்படி இருக்கும் என்று சிறிது கூறுங்கள் பார்ப்போம்?

ப: தமது பெற்றோர்கள் உயிருடன் இருக்கும்போது பிள்ளைகள் எப்படி துணிச்சலுடன் இருப்பார்களோ அப்படி இருப்பார்கள்!

கே. ஜே. ஆர். ஜெயவர்தனவுக்கும், அமிர்தலிங்கத்துக்கும் தனிநாடு அமைக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டால்?

ப: இலங்கைத் தீவின் வரலாற்றில் இருவருக்கும் எக்காலத்தும் அழிக்கமுடியாத இடம் கிடைக்கும்!

கே: தமிழர் கூட்டணியின் வெற்றி எதைக் குறிக்கின்றது குயுக்தியாரே?

ப: ஒன்று பட்டாலுண்டு வாழ்வு—ஒற்றுமை நீங்கிடின் அனைவர்க்கும் தாழ்வு என்பதை!

ம. யோ. ஜீவரத்தினம்
நுகவில்
கரவெட்டி

கே: குமாரசூரியரின் பாடு எப்படி? சுகமா?

ப: ஐயோ பாவம், எங்காவது கட்டட வேலையிருந்தால் அவருக்கு எடுத்துக் கொடுங்களேன்!

ஃ

முருகேசன்,
கொழும்பு-12.

கே: புதிய கூட்டணி பா உ.க்களில் இப்போது மக்களைக் கவர்பவர் யார்?

ப: மன்னார் எம்.பி. சூசைதாசன். இவரது பேச்சுப் பாணியும், இடையிடையே இவர் கூறும் குட்டிக் கதைகளும், அடிக்கடி தமது இனிய குரலினால் இசைக்கும் பாடல்களும், பாமர மக்களுக்கும் தமிழ்ஈழ மக்களின் நிலையை எடுத்துக் காட்டக்கூடியன. தமிழர்களின் பழைய இலக்கியங்களிலிருந்து பொருத்தமான மேற்கோள்களை எடுத்துக் கூறி இலக்கியச் சுவையுடன் இசையும் கலந்து சூசைதாசன் ஆற்றுகின்ற உரை அரசியலில் ஒரு "சங்கீத கதாப்பிரசங்கமாக" இருப்பதனால் அனைவரையும் சுலபத்தில் ஈர்த்து விடுகிறது. முன்பெல்லாம் கூட்டணி கூட்டங்களில் கடைசிப் பேச்சாளராக நாவலர் அமிர்தலிங்கமோ,' இராசதுரையோதான் இருப்பார்கள்; இப்போது அந்த இடம் சூசைதாசனுக்கு கிடைத்திருக்கிறது.

ஃ

தமிழ்ச் செல்வி
கரவெட்டி

கே: காசிஆனந்தனின் தோல்வியால் கவலையடைந்துள்ள உங்களுக்கு நீங்கள் என்ன ஆறுதல் கூறுகிறீர்கள்?

ப: கவலைகள் கிடக்கட்டும் மறந்துவிடு — காரியம் நடக்கட்டும் துணிந்து விடு!

ஃ

கே. சந்திரசேகர்
மலர் வாசா
குருத்தலாவை

கே: தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்க்கட்சியாக அமைந்ததையிட்டு ஒரு விழாக் கொண்டாடப் போகிறோம் — அதற்கு நீங்களும் சமுகமளிப்பீர்களா?

ப: தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ்ஈழத்தின் ஆளுங்கட்சியாகும் நாள் வரட்டும்! அப்போது விழா நடத்துங்கள்! அதில் நிச்சயம் கலந்துகொள்வேன்!

முருகேசு பொன்னம்பலம்
வெள்ளவத்தை,

கே: தமிழ் மக்கள் இப்போது என்ன மன நிலையிலிருக்கிறார்கள்!

ப: தமிழ் ஈழத்தாயகத்தின் விடுதலைக்காக தங்கள் வாக்குரிமையை முழுமையாகப்பயன்படுத்தி விட்டு, நமது தலைவர்களின் ஒவ்வொரு நடவடிக்கைகளையும் கூர்ந்து நோக்கியபடி இருக்கிறார்கள்!

கே: தினசதியார் என்ன செய்கிறார்?

ப: காக்காய் பிடிக்கிறார். முன்பு கலைஞர் கருணாநிதியை விட சிறிமா அரசாங்கத்தின் கங்காணி அமைச்சர் குமாரசூரியர் தான் சிறந்த அறிஞர் என்று கூறி அவருக்கு காக்காய் பிடித்தார்; இப்போது தேவநாயகத்துக்கு காக்காய் பிடிக்கிறார். சிங்கள ஏகாதிபத்தியத்தின் கங்காணிகளுக்கு காக்காய் பிடிப்பது தான் அவரது ஒரே திருத்தொண்டு! கூட்டணியை இந்தத்தேர்தலில் தொலைத்துக் கட்டுகிறேன்—என்று தமது சிங்கள எசமானர்களுக்கு வீரம் பேசிக்காட்டிய இந்த எட்டப்பர் கூட்டணியின் வெற்றி முரசம் கேட்டு இப்போது முக்காடுபோட்டுக் கொண்டு முனகிக்கொண்டிருக்கிறாராம்!

● கேள்விகள் அனுப்புவோர் அஞ்சலட்டையில் பின்வரும் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்பவேண்டும்.

திருவாளர் குயுக்தியார்
194 ஏ பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு–12.

# லண்டனில் நடைபெறும் தமிழ் மாணவர் மாநாடு

தமிழர்களின் தற்போதைய இக்கட்டான நிலையை உணர்ந்து, தமிழ் இனம் விமோசனத்துக்காகப் போராடத் தொடங்கியுள்ள இக் காலகட்டத்தில், ஒரு இனத்தின் விடுதலையில் அந்த இனத்தின் மாணவசக்திக்கு இருக்க வேண்டிய பங்கைச் செலுத்துவதற்காக மேற்கு நாடுகளில் வாழும் ஈழத்தமிழ் மாணவர்கள் ஒன்றுகூடி ஒரு மாநாட்டை நடாத்த எண்ணியுள்ளனர்.

இம்மாணவ மாநாடு இம்மாதம் 19ம் 20ம் திகதிகளில் லண்டனிலுள்ள ரோயல் கொம்மன்வெல்த் மண்டபத்தில் நடைபெறும். இரண்டு நாட்கள் நடைபெறும் இம்மாநாட்டில் "இலங்கைத் தமிழர்களின் சமூக அரசியல் விமோசனம்" என்னும் பொருள் பற்றிய ஒரு கருத்தரங்கும் அத்தகைய விமோசனத்தில் வெளிநாடுகளில் படிக்கும் மாணவர்களின் பங்கு என்ன என்பதுபற்றிய ஒரு ஆய்வு அரங்கும் இடம் பெறும். இதில் இலங்கை அரசியல் துறையில் பிரபல்யமடைந்த ஆராய்ச்சியாளர்களும், அரசியல் விற்பன்னர்களும் பங்குபற்றுவார்கள்.

இதைவிட இலங்கைத்தமிழர்களின் முதுகெலும்பான மலைநாட்டுத் தமிழர்களின் பிரச்சினையைப் பிரதிபலிக்கும் வண்ணம் தேயிலையும் இலங்கைத் தமிழர்களும்" என்ற தலைப்பில் ஒரு விளக்கப் போதனைக் கூட்டமும் வெளிநாட்டுப் பிரமுகர்களால் நடத்தப்படும். இப்பிரமுகர்களில்ஆங்கில எழுத்தாளர் உட்பட அரசியல் பிரமுகர்களும் உளர்.

அத்துடன் வெளிநாடுகளில் படிக்கும் மாணவர்களின் இக்கட்டான நிலையைப் பிரதிபலிக்கும் வகையில் அவர்கள் பிரச்சினையை ஆராயும் ஒரு அரங்கமும் அதைத் தொடர்ந்து தேசியப் பிரச்சினைகளில் மாணவர்களின் பங்கு என்ன என்பதுபற்றி உலகில் முன்னேற்றமடைந்த தேசிய விடுதலை இயக்கங்களின் பிரதிநிதிகளும் ஆராய்வார்கள். அதன்மூலம் தமிழ் மாணவர்கள் இலங்கைத் தமிழர்களின் விமோசனத்தில் தமது பங்கை உணர்ந்து கொள்வார்கள் என்பது மட்டுமல்லாமல் உணர வைப்பதுமே இம்மாநாட்டின் அமைப்பாளர்களின் திரிகரண சுத்தியான எண்ணமும்கூட.

—மேற்கண்டவாறு தமிழ் மாணவர் பேரவையின் (Tamil Students Congress) ஐக்கியராச்சியம், ஐரோப்பா ஐக்கிய அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளின் ஈழத் தமிழ் மாணவர்களுக்கான குழுவின் (Committee for the Ceylonese Tamil Students in U. K., Europe, U.S.A. and Canada) செயலாளர் திரு. க. கனகரத்தினம் சுதந்திரன் ஆசிரியர் திரு. கோவை மகேசனுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

**சுதந்திரன்**

**(வாரம் இருமுறை)**
**சந்தா விபரம்**

ஓராண்டு — ரூபா. 50.00
அரையாண்டு — „ 25.00

**சுடர்**

(கலை இலக்கிய திங்களிதழ்)
ஓராண்டு — ரூபா: 12.00

அனுப்பவேண்டியமுகவரி:
நிர்வாகி சுதந்திரன்

194 ஏ, பண்டாரநாயக வீதி,
கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "செல்வாவுக்குப் பின் தமிழர் கூட்டணியை சரியான பாதையில் இட்டுச்செல்கிறுர் அமிர்"

## நாவலருக்கு சிலம்புச்செல்வர் பாராட்டு!

"இலங்கையில் தமிழருக்கு வெற்றி" எனும் தலைப்பில் 'செங்கோல்' இதழில் (31-7-77) சிலம்புச் செல்வர் ம. பொ. சி. எழுதியுள்ள ஆசிரியத் தலையங்கம் வருமாறு:-

"இலங்கை நாடாளுமன்றத்தேர்தலிலே சிறிமாவோ பண்டார நாயகாவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி படுதோல்வியடைந்து விட்டது. அதனை எதிர்த்துப் போட்டியிட்ட ஐக்கியதேசியக் கட்சி மகத்தான வெற்றியடைந்திருக்கிறது. ஆயினும் பிரதமர் பதவியிலிருந்த சிறிமாவோ பண்டார நாயகா பத்தாயிரம் வாக்கு வித்தியாசத்தில் நாடாளுமன்றத்திற்குத்தேர்ந் தெடுக்கப் பெற்றிருக்கிறுர்.

இலங்கையின் பொதுத் தேர்தல் முடிவு, ஆளுங்கட்சியாக இருந்த சுதந்திரக் கட்சிக்கு அதிர்ச்சியைத் தரக் கூடியதுதான். பண்டார நாயகாவின் ஆட்சி இடதுசாரிப்போக்கில் இயங்கி வந்தது. சர்வதேசப் பிரச்சினைகளில் ஏகாதிபத்தியங்களுக்கு எதிரான அணியில் இருந்தது. அப்படியிருந்தும், உள்நாட்டில் மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலே அதுவெற்றி காணுததே அதன் வீழ்ச்சிக்குக் காரணமாகும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் திரு. ஜெயவர்த்தனே ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளார். இவரது ஆட்சி இலங்கைப் பூர்வகுடித் தமிழர் பிரச்சினையிலும், இந்திய வம்சாவழியினர் விஷயத்திலும் சிறிமாவோ பண்டார நாயகாவைவிடவும் [illegible]யம் வழங்குமென்று நம்புகிறோம். பொறுத்திருந்து பார்ப்போம்.

இலங்கை நாடாளுமன்றத்தேர்தலில் தமிழர் விடுதலை முன்னணிக்கு மகத்தான வெற்றி கிடைத்திருக்கிறது. தமிழரெல்லாம் ஒன்றுபட்டதன் விளைவு இது. திரு. செல்வநாயகத்தின் [illegible]தலைமையை இழந்த பிறகு, தமிழர் முன்னணி தளர்ந்துவிடவில்லை, வளர்ந்தே வருகிறது என்பதற்கு இந்த வெற்றி சிறந்த சான்றுகும். செல்வநாயகத்திற்குப் பின் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள திரு. அமிர்தலிங்கம், முன்னணியை சரியான பாதையில் நடத்திச் செல்கிறுர். அதற்காக அவரைப் பாராட்டுகிறோம். வெற்றி கண்டுள்ள தமிழர் முன்னணிக்கு வாழ்த்துக் கூறுகிறோம்.

இந்த முறை இலங்கை நாடாளுமன்றத்திலே பிரதான எதிர்க்கட்சியாக தமிழர் முன்னணியே வந்திருக்கிறது. இதனுல் அதன் அரசியல் அந்தஸ்து உயர்ந்து விட்டது. அத்துடன் தமிழினத்தாரின் அணிதானென்ருலும் சிங்களவரையும் சேர்த்து தேசம் முழுவதற்கும் அதுதான் பார்லிமெண்டரி முறையிலான எதிர்க்கட்சியாக இயங்கப் போகிறது. இந்த மாறுதலை இலங்கையில் தேர்தல் முடிவு தமிழர் முன்னணி மீது சுமத்தியிருக்கிறது. இதனுல், இந்தக் கட்சிக்கு தேசிய அந்தஸ்தும் கிடைத்திருக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அரசில் சேர்ந்து கொள்ளுமாறு அக்கட்சியின் தலைவர் விடுத்த அழைப்பை தமிழர் முன்னணித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் ஏற்க மறுத்திருக்கிறுர். இது பாராட்டத் தக்க அரசியல் பண்பாடாகும். எதிர்க்கட்சிக்குரிய இடத்தை சூன்யமாக்கிவிட தமிழர் முன்னணி விரும்பாதது, அதன் அரசியல் ஒழுக்கத்தைக் காட்டுகிறது.

இலங்கை நாடாளுமன்றத்தில் இதுகாறும் இனக் கட்சியாக மட்டுமே இயங்கி வந்த தமிழர் முன்னணிக்கு இப்போது, இலங்கையிலுள்ள சிங்களவர்களையும் சேர்த்து அனைத்து இலங்கையர்க்காகவும் பாடுபடக் கூடிய எதிர்க்கட்சி இடத்தையும் ஏகபோகமாகப் பெற்றுவிட்டது. தமிழர் முன்னணி காலம் கொடுத்த இந்தக் கட்டளையை அது சரிவர நிறைவேற்றுமென்று நம்புகிறோம். நிறைவேற்றி, சிங்கள மக்களின் நல்லெண்ணத்தையும் பெறவேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

எதிர்க்கட்சியின் இடத்திலிருந்து கொண்டு சிங்கள மக்களுக்காகவும் பாடுபடுவதன் மூலம்தமிழர் முன்னணியின் மொழி — அரசியல் கொள்கைகளிலுள்ள நியாயத்தை சிங்கள மக்களும் உணரும்படி செய்ய வேண்டும்.

அது எப்படியாயினுஞ் சரி; தமிழினத்தவரின் உரிமைக் கிளர்ச்சி ஒரு புதிய வேகத்தைப்பெற்றுவிட்டது, தேர்தல் களத்திலே தமிழர் முன்னணிக்குக் கிடைத்துள்ள மகத்தானவெற்றியால்!

இலங்கை தமிழ் இளைஞர்கள் —குறிப்பாக, புரட்சி உள்ளம் படைத்தவர்கள் செய்துள்ள தியாகம் வீண் போகவில்லை. அந்த இளைஞர்கள் இனி தங்கள் மீதுசுமத்தியுள்ளபுதியபொறுப்புக்கேற்பச் செயல்படவேண்டும். இனி, ஜெயவர்த்தனே ஆட்சி தமிழர் முன்னணியை ஒடுக்க முயன்ருல், அதனை ஒரு இனக் கட்சியை ஒடுக்கும் முயற்சியாக மட்டுமல்லாமல். இலங்கை முழுவதற்குமான தேசிய எதிர்க் கட்சியையே ஒடுக்கும் முயற்சியாகத்தான் உலகம் மதிக்கும். ஆகவே, இலங்கையில் தோன்றியுள்ள புதிய ஆட்சியானது தமிழர் முன்னணியின்மொழி — அரசியல் கோரிக்கைகளை ஏற்க முன் வரவேண்டும். முன்வருமென்றும் நம்புகிறோம்;

# தமிழகத்தலைநகராம்சென்னையில் தமிழ் ஈழ வெற்றிவிழா!

## விடுதலைப் போருக்கு தமிழகம் ஆதரவு!

**தமிழ் ஈழத்தின் வெற்றிவிழாக் கூட்டம் தமிழகத்தலைநகரான சென்னை மாநகரில் 25.7.77ல் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு சிறைமீண்ட இளைஞரும், த. இ. பேரவை முன்னணி வீரர்களில் ஒருவருமான திரு. பொன் சத்தியசீலன் சிறப்புரை நிகழ்த்தினுர்.**

தமிழ்ஈழத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி வெற்றிவாகை சூடியதைப் பாராட்டி தமிழகத் தமிழர்கள் எடுத்த இந்த வெற்றிவிழா 25.7.77 சென்னை எழும்பூரில் வீராசாமிப்பிள்ளை தெருவில் நடைபெற்றது. இவ்விழாவினை உலகத் தமிழர் பாதுகாப்பு பேரவை ஏற்பாடு செய்திருந்தது.

கனடா செல்லும் வழியில் சென்னையில் தங்கியிருந்த த. இ. பேரவையின் முன்னணி வீரரும் சிறைமீண்ட இளைஞருமான திரு. பொன். சத்தியசீலன் இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்தினுர். திரு. சத்தியசீலன் தமது உரையில் தமிழ் ஈழப் பிரச்சினை குறித்தும் நடைபெற்ற தேர்தலில் தமிழ்ஈழக் கொள்கைக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் கிடைத்த மாபெரும் வெற்றி குறித்தும், கூட்டணியின் அடுத்த செயல் திட்டங்கள் குறித்தும் எடுத்து விளக்கி, தமிழக மக்களின் ஆதரவை, தமிழக அரசியல் கட்சிகளின் ஆதரவை கோரினுர்.

திரு. நாஞ்சில் வைரவன் பேசுகையில், ஈழத்தமிழர்கள் தங்கள் தமிழ் ஈழத்தின் விடுதலைக்காக நடத்துகின்ற போராட்டத்தை, இன உணர்வோடு தமிழக மக்களாகிய நாம் பூரணமாக ஆதரிக்கிறோம் என்று தெரிவித்தார்.

திருமதி சங்கரி நாராயணன் பேசுகையில் — தமிழ் ஈழத்தின் விடுதலைக்கு அங்குள்ள தமிழ் மாதர்கள் திருமதி மங்கையர்க்கரசியின் தலைமையில் போராடுகிறுர்கள்; அவர்களது போராட்டத்துக்கு தமிழ் நாட்டுத் தாய்க்குலம் தனது ஆதரவையும் ஒத்துழைப்பையும் அள்ளி வழங்கக் காத்திருக்கிறது என்று முழக்கமிட்டார்,

முன்னுள் இ. தி. மு. க. பொதுச்செயலாளர் திரு. ஏ. எஸ். மணவைத்தம்பி பேசுகையில் — ஈழத்தில்சிங்கள ஏகாதிபத்தியம் தமிழ் மக்களுக்கு ஒவ்வொன்ருக இழைத்துவந்த கொடுமைகளை அடுக்கடுக்காக விபரித்து இன்று இரண்டில் ஒன்று என்ற நிலைக்கு தமிழினம் தள்ளப்பட்டிருப்பதை எடுத்துக்கூறினுர்.

உலகத்தமிழ் பண்பாட்டு இயக்க தமிழ்நாடு கிளைச் செயலாளர். அரு. கோபாலன் பேசுகையில் — ஈழத் தமிழர்களின் தனிநாடு கோரிக்கை நியாயமானது என்பதை புள்ளிவிபரமாக எடுத்து விளக்கியதுடன் ஈழத்தில் நடைபெற்ற பல்வேறு இன விடுதலைப்போராட்டங்களை விபரித்தார்.

திரு. தமிழ் மன்னன் பேசுகையில் — வட வியட்னும் போருக்கு தமிழக மக்கள் ஆதரவுகாட்டியது போன்று, பங்களாதேஷ் மக்களின் சுதந்திரப்போருக்கு இந்திய நாடு படையனுப்பி உதவியது போன்று, இலங்கையில் நடைபெறும் தனித் தமிழ் ஈழ விடுதலைப்போருக்கு ஈழத் தமிழ் விடுதலைப்படையினர் எதிர்பார்க்கும் அத்தனை உதவிகளையும் செய்திடவேண்டும்; செய்வோம். இந்திய விடுதலைப்போருக்கு லண்டன் மாநகரிலிருந்து உதவிய வீர சவர்க் கார்களைப் போன்ற வீரர்களை உலகத் தமிழ்ப் பாதுகாப்பு பேரவை உருவாக்கும்; தமிழ்ஈழ விடுதலைப் போருக்கு கைகொடுக்கும்; என்று ஆவேசத்துடன் முழங்கினுர்;

தமிழக மாணவர் தலைவர் —தேசிங்குராஜன் வாரிசு— தமிழக சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி ந. இராமச்சந்திரன் பீ. ஏ. பி. எல். பேசுகையில் — தமிழ்ஈழத்தில் தமிழர்களுக்கு கொடுமைகள் இழைக்கப்படுமானுல், தமிழ்ஈழ விடுதலை வீரர்கள் கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டால், தமிழகத்திலுள்ள மாணவ சமுதாயம் கொதித்தெழுந்து குரல் கொடுக்கும்; தமிழ்ஈழ விடுதலைப் போருக்கு தோள் கொடுக்கும்; என்று வீரவுரை நிகழ்த்தினுர்.

இறுதியாக தொழிற்சங்கத் தலைவரான திரு. சுப்பு பேசுகையில் — "தமிழ்ஈழ விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவாக உலகெங்கும் வாழும் ஏழுகோடித் தமிழர்களும் ஒன்றுபட்டு குரல்கொடுக்க வேண்டும்; ஈழத்தில் தமிழர்கள் கொடுமைப்படுத்தப்பட்டால், தமிழ் நாட்டுத் தொழிலாள வர்க்கம் தூங்கிக் கொண்டிருக்காது; துடித்தெழும்; தமிழ்ப் பகையினை தூள் தூளாக்கும்" என்ருர்.


## எமது வெளியீடுகள்

| | |
|---|---|
| நெஞ்சம் நிறைந்த தம்பி —கோவை மகேசன் | 2-00 |
| தெருப்புலவர் சுவர்கவிதை —கவிஞர் காசி ஆனந்தன் | 1-00 |
| இலங்கையில் தமிழர் உயர்கல்வி —பேராசிரியர் ஹிலறி குறூஸ் | 2-00 |
| இலங்கைத் தமிழர் இன்னல் தீருமா —டாக்டர் இரா. சனுர்த்தனம் —ஆ. இராசரத்தினம் (எல்லாளன்) | 1-00 |
| அனைத்துலக நீதிச்சபை முன் இலங்கை தமிழர் பிரச்சினை —தமிழர் கூட்டணி அறிக்கை | 2-00 |
| தடுப்புக்காவலில் பத்து நாட்கள் —கா. பொ. இரத்தினம் பா. உ. | 1-00 |
| தமிழன் சிந்திய இரத்தம் 1958ல் நடந்தஇனக்கலவரம்பற்றியது —நாவண்ணன் | 1-50 |
| துரோகிகளே தூரவிலகுங்கள் —கோவை மகேசன் | 2-50 |
| ஏன் வேண்டும் தமிழ் ஈழம்? | 2-00 |
| புத்தளத்தில் இரத்த களம் (புத்தளம் 1976 முஸ்லிம்—சிங்களவர் கலவரம் பற்றியது) —நாவண்ணன் | 3.00 |

V. P. P. ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
தபால் செலவு சதம். 60
சுதந்திரன் வெளியீட்டகம்,
194 ஏ, பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு—12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

# சர்வகட்சி மாநாடு

"தமிழ் பேசும் மக்களைப் பல பிரச்சினைகள் எதிர்நோக்குகின்றன என்பதை எனது அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுகிறது. அவர்களது பிரச்சினைகளுக்குத் தீர்வொன்று ஏற்படாமையானது ஒரு தனியரசை உருவாக்குவதற்கான ஓர் இயக்கத்தைக் கூடத் தமிழ் மக்கள் ஆதரிக்கும் நிலையைத்தோற்றுவித்துள்ளது. முழுநாட்டினதும் பொருளாதார அபிவிருத்திக்கு மிகவும் அவசியமான தேசிய ஒருமைப்பாடு, ஒற்றுமை என்பனவற்றின் நலன் கருதி அத்தகைய பிரச்சினைகள் காலதாமதமின்றி தீர்த்து வைக்கப்படவேண்டும் என அரசாங்கம் உணர்கிறது. அத்துடன் பின்வரும் துறைகளில் அவர்களுக்குள்ள குறைபாடுகளுக்குப் பரிகாரங்காண்பதற்கு சாத்தியமான எல்லா நடவடிக்கைகளையும் அரசாங்கம்மேற்கொள்ளும்.

(1) கல்வி.

(2) குடியேற்றம்

(3) தமிழ்மொழிப்பிரயோகம்

(4) அரசாங்க கூட்டுத்தாபனங்களிலும் அரசாங்க சார்புடைய கூட்டுத்தாபனங்களிலும் தொழில் வாய்ப்பு.

இப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் பொருட்டு எனது அரசாங்கமானது சர்வகட்சி மாநாடொன்றைக் கூட்டி அதன் தீர்மானங்களை செயற்படுத்தும்!"

குடியரசுத் தலைவரினால் தேசிய அரசுப்பேரவையில் 4-8-77ல் சமர்பிக்கப்பட்ட புதிய அரசாங்கத்தின் கொள்கைத் திட்டக்கூற்றில் தமிழ் மக்களின் பிரச்சினை சம்பந்தமாக மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த அறிவிப்பை மட்டும் கேட்டுவிட்டு தமிழ் மக்கள் புளகாங்கிதமடையவோ, குதூகலிக்கவோ, அல்லது தங்கள் பிரச்சினைகள் தீரப்போவதாக கருதி ஆறுதலடையவோ—அமைதி பெறவோ — எந்தவித முகாந்திரமும் கிடையாது.

தமிழ் மக்களின் அபிலாஷைகளை புதிய அரசு எவ்விதம் சந்திக்கவிருக்கிறது என்பதுபற்றிய அரசின் சொந்தத் திட்டம் எதுவும் தரப்படவில்லை — வெறும் வட்டமேசை மாநாடு பற்றியே பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இந்நிலையில் கடந்த 20 ஆண்டுகளாக நாட்டில் நடைபெற்றுவந்த நிகழ்ச்சிகளை தமிழினம் ஒரு கணம் அசைபோட்டுப் பார்த்துக் கொள்வது நல்லது என்று கருதுகிறோம்.

1956ம் ஆண்டு காலஞ்சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயகாவுக்கு சிங்கள மக்களிடையே அபரிமிதமான செல்வாக்கு இருந்தது; அப்படியிருந்தும், தமிழினத்தின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதற்கு அவர் தந்தை செல்வாவுடன் செய்துகொண்ட நியாயமான ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு சிங்களப் பொதுமக்கள் அவரை அனுமதிக்க மறுத்து, ஒப்பந்தத்தைக் கிழித்தெறியச் செய்தனர்.

1965ம் ஆண்டு காலஞ்சென்ற பிரதமர் டட்லி சேனநாயகா அவர்களுக்கு சிங்கள மக்களிடையே நல்ல செல்வாக்கு இருந்தபோதிலும்—அவர் தந்தை செல்வாவுடன் தாம் செய்துகொண்ட ஒப்பந்தப்படி மாவட்ட சபைகளை வழங்கவிடாது, சிங்கள மக்கள் பொங்கியெழுந்து தடுத்துவிட்டனர்.

மீண்டும் 1970ம் ஆண்டு திருமதி பண்டாரநாயகா அவர்கள் மூன்றில் இரு பங்கு பெரும்பான்மை பலத்துடன் ஆட்சிபீடமேறி புதிய அரசியலமைப்பையே உருவாக்கினார்; அரசியலமைப்பை உருவாக்குவதற்குக் கூடிய அரசியல் நிர்ணய சபையில், தமிழினத்தின் மொழியுரிமை, குடியுரிமை, மதவுரிமை, நிலவுரிமை ஆட்சியுரிமை சம்பந்தமாக தமிழ்ப் பிரதிநிதிகள் சமர்ப்பித்த அத்தனை கோரிக்கைகளையும், திருத்தங்களையும் சிங்களக் கட்சிகளான சிறீலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கிய தேசியக்கட்சி, இடதுசாரிக் கட்சிகளான சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி ஆகிய அனைத்தும் கூட்டாக எதிர்த்து வாக்களித்து நிராகரித்தன; இதனால் அந்தச் சர்வ சிங்கள அரசியல் நிர்ணய சபையிலிருந்து தமிழ்ப் பிரதிநிதிகள் வெளிநடப்பு செய்து அதைப் பகிஷ்கரித்தனர்! புதிய அரசியலமைப்புக்கு தீ மூட்டினர்!

திருமதி சிறிமா பண்டாரநாயகா அவர்கள், தன்னுடைய ஆட்சியின் இறுதிக்காலத்தில் தமிழினப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பது குறித்து ஆலோசிப்பதற்காக பண்டாரநாயகா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஓர் சர்வகட்சி மாநாட்டைக் கூட்டியிருந்தார். இந்த மாநாட்டை இன்றைய ஆளுங்கட்சியான யூ. என். பி. அப்போது பகிஷ்கரித்தது.

இது கடந்த கால வரலாறு! இப்போது மறுபடியும் புதிய பிளாவில் பழைய கள்ளை ஊற்றுவதுபோல—தமிழ் மக்களை மயக்கும் பொருட்டு சர்வகட்சி மாநாடு பற்றி புதிய அரசின் கொள்கைக்கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் இ[illegible]றைய அபிலாஷை ஒரு சிலமொழிச்சலுகைகளோ அல்லது உத்தியோக சலுகைகளோதான் என்று சிங்கள அரசு கருதுமானால், அது தப்புக்கணக்குப்போடுகிறது என்பதே அர்த்தமாகும். மொழிச்சலுகைகளையோ உத்தியோக சலுகைகளையோ இன்று தமிழினம் நாடவில்லை; தமிழ் மக்கள் இன்று வேண்டுவது தங்கள் தேனினுமினிய சுதந்திரம்; தமது தாயகத்தில் தமிழ் ஈழத்தில் தம்மைத் தாமே ஆளுகின்ற பூரண சுயாதிபத்தியம். இதையே நடந்து முடிந்ததேர்தலில் தமிழ் மக்கள் எதுவித ஐயத்துக்குமிடமின்றி எடுத்துக் கூறியிருக்கிறார்கள்!

எனவே எந்த[illegible]ஒரு வட்டமேசையும் சரி, சதுரமேசையும் சரி, தமிழ்மக்களின் இந்த சுதந்திர சுயாட்சிக் கனவை, அபிலாஷையை ஈடு செய்வதாக அமைந்தால் மட்டுமே அது பயனுள்ளதாக அமையுமே தவிர — வேறு எந்த அற்ப சலுகைகளாலும் தமிழ் மக்கள் திருப்தியடைந்து விடமாட்டார்கள்! இதை சிங்களக் கட்சிகள் அனைத்துக்கும் இப்போதே கூறிவைக்க விரும்புகிறோம்!

அதே சமயம்—அரசு தனது வட்டமேசையை கூட்டுகிறபோது கூட்டட்டும்; அதுவரை தமிழர் விடுதலைக்கூட்டணியோ, தமிழ் மக்களோ வட்டமேசையை எதிர்பார்த்துக் கொட்டாவிவிட்டுக் கொண்டிருக்க வேண்டியதில்லை! தமிழினம் தந்த கட்டளையான தமிழ் ஈழ இலட்சியத்தை நோக்கி ஒவ்வொரு அடியையும் நிதானமாக ஆனால் விரைவாக —எடுத்துவைப்போம்!

# கூட்டணித் தலைவர்களின் கட்டளைக்கு இளைஞர்கள் காத்திருக்கிறார்கள்!

## ஈழவிடுதலை முன்னணி செயலாளர் அறிவிப்பு



"ஈழ விடுதலைக்காக எமது கல்வியையும் துறந்துவிட்டு போராட்டத்தில் குதிக்க இலண்டனிலும் வெளிநாடுகளிலும் பல இளைஞர்கள் ஆயத்தமாயிருக்கிறார்கள். சிலர் தொழிற்சாலைகளில் முழுநேர ஊழியர்களாக வேலை செய்து தமது ஊதியத்தின் பெரும் பகுதியை இனவிடுதலைக்காக செலவிட முன்வந்திருக்கிறார்கள். கூட்டணித் தலைமைப் பீடத்தின் கட்டளைக்காகக் காத்திருக்கிறார்கள். ஆனால் தலைவர்கள் தமிழ் மக்கள் தமக்களித்த அதிகாரத்தைக் கொண்டு தனிநாடு பெறத் தயங்காமல் உழைக்கவேண்டும். சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு இடம் கொடுத்துத் தவறான பாதையில் செல்லும் தலைவர்களைத் தூக்கி எறிய இளைஞர்களால் முடியும். எமக்கு ஈழத்திலுள்ள தீவிர இளைஞர்களோடு நெருங்கிய தொடர்பு உண்டு. இளைஞர்கள் தலைவர்களின் நடவடிக்கைகளைக் கூர்ந்து அவதானித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு இலண்டன் ஈழவிடுதலை முன்னணிச் செயலாளர் திரு. என். எஸ். கிருஷ்ணன் கடந்த வாரம் (28-7-77) கிழக்கு இலண்டனில் நடந்த ஈழ விடுதலை முன்னணி உறுப்பினரின் கூட்டத்தில் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் தீவிர இளைஞர்களைக்கொண்ட ஒரு நடவடிக்கைக்குழு தெரிவு செய்யப்பட்டது. தாய் நாடு திரும்பவிருக்கும் தமிழர் கூட்டணிப் பிரமுகர் ஒருவர் இவ்வியக்கத்தின் ஆலோசகராக நியமிக்கப்பட்டார்.

## நல்லூர் சிவாவுக்கு கொழும்பில் வரவேற்பு!

தமிழர்விடுதலைக்கூட்டணி செயலதிபர்களில் ஒருவரும் தமிழ் ஈழத்தில் ஆகக்கூடுதலான பெரும்பான்மை வாக்குகளினால் வெற்றியீட்டியவருமான நல்லூர் பா. உ. திரு. மு. சிவசிதம்பரம் அவர்களுக்கு நல்லூரார்த் தொகுதி மக்களின் சார்பில் பொது வரவேற்பு ஒன்றினை கொழும்பிலுள்ள கொக்குவில் முன்னேற்ற மன்றத்தினர் 17-8-77 புதன் கிழமை மாலை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் அளிக்கின்றனர். இவ் வரவேற்பு விழாவில் தமிழ் ஈழமுதல்வரும், சிங்கள சிறீலங்காவின் எதிர்க்கட்சி தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் பா. உ, யாழ் பா. உ. திரு. வெ. யோகேஸ்வரன், வி. தர்மலிங்கம் பா. உ; சி. கதிரவேற்பிள்ளை பா. உ, உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன், ஈழவேந்தன் ஆகியோர் உரை நிகழ்த்துகிறார்கள்.

## ஈழவேந்தன் பேசுகிறார்!

கொழும்பு அக்குவைனாஸ் கல்லூரியில் சமூக எழுச்சிப் பயிற்சி நிறுவனத்தின் ஆதரவின் கீழ் 18-8-77 வியாழக்கிழமை மாலை 5-30 மணிக்கு 'தனிநாடு கோரிக்கையும்—அதன் பொருளாதார பலமும்'' என்னும் பொருள் பற்றி நாட்டின் பல்வேறு பகுதியிலிருந்து வரும் இளைஞர்கள் மத்தியில் உரையாற்றுகிறார். வண. பிதா. இம்மானுவல் பெர்னாண்டோவின் வேண்டுகோளின் படியே திரு. ஈழவேந்தன் இந்த உரையை நிகழ்த்துகிறார்.

———

## ஆண்டுக்கூட்டம்

அஞ்சல் எழுது வினைஞர் சங்கத்தின் மட்டக்களப்பு கிளையின் 3வது ஆண்டுக்கூட்டம் 15-8-77 திங்கட்கிழமை மாலை 4-30 மணிக்கு மட்டக்களப்பு பிரதேச கணக்கீட்டு அலுவலகத்தில் நடைபெறும்.

## தொண்டமானுக்கு கொழும்பில் வரவேற்பு!

30 ஆண்டுகளுக்கு பின்னர் தமிழ் ஈழத்துக்கு வெளியே பாராளுமன்ற உறுப்பினராக தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஒரேயொரு தமிழரும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவருமான திரு. சௌ. தொண்டமான் அவர்களுக்கு கொழும்பு வாழ்தமிழ் மக்கள் 13-8-77சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் வரவேற்பு விழாவொன்றை நடத்துகின்றனர். இவ் வரவேற்பு விழாவுக்கு முன்னர், பம்பலப்பிட்டி மாணிக்கவிநாயகர் ஆலயத்தில் திரு. தொண்டமான் அவர்கள் விசேட பூசையொன்றில் கலந்து கொள்வார். பின்னர் அங்கிருந்து விழா மண்டபத்துக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவார். மலையக முன்னணிக் கவிஞர்களில் ஒருவரான திரு. அழகுப்பிள்ளை திரு. தொண்டமானுக்கு வாழ்த்துப்பா ஒன்றைப்பாடி வழங்குவர். விழாவில் தமிழர் விடுதலைக் கூட்டணி பா.உ.க்கள் உட்பட பல பிரமுகர்கள் உரையாற்றுவார்கள்.

———

## தனிச் சிங்களத்தில் நிதியமைச்சரின் சுற்று நிருபம்!

பதவிக்கு வந்ததும், புதிய நிதியமைச்சர் ரொனி டீமெல் சகல திணைக்களங்களிலுமுள்ள அரசாங்க ஊழியர்களுக்கு பொதுமக்களுடன் அவர்கள் எப்படி பழகவேண்டுமென்பது குறித்து ஓர் சுற்று நிருபம் அனுப்பி வைத்திருக்கிறார். நிதியமைச்சரே கையெழுத்திட்டு அனுப்பியுள்ள இந்தச் சுற்று நிருபம் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டுமே அனுப்பப்பட்டுள்ளது. தமிழில் சுற்று நிருபம் அனுப்பப்படவேயில்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கே ஆகக் கூடுதலான வாக்குகள்!

## அங்கு நமக்கு ஆதரவில்லையென்பது சுத்தப் பொய்!

## புள்ளி விபரம் கூறுகின்ற உண்மை இது!

**நடைபெற்று முடிந்த தேர்தல் பெறுபேறுகளின்படி கிழக்கு மாகாணத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செல்வாக்கு வீழ்ச்சியடைந்து விட்டதாகவும், ஐக்கியதேசியக்கட்சிக்கே அங்கு ஆதரவு பெருகியிருப்பதாகவும் ஒரு திட்டமிட்ட பிரசாரம் தினசதிக் கும்பலினுல் நடத்தப்பட்டுவருகிறது. ஆனுல் தேர்தலில் கட்சிகளுக்குக் கிடைத்த வாக்குகள் கூறும் புள்ளி விபரங்களின் படி, இப்பிரசாரம் கடைந்தெடுத்த பொய் என்பதும் ஐக்கிய தேசியக் கட்சியை விட தமிழர் விடுதலைக் கூட்டணிக்கே கூடுதலான வாக்குகள் கிழக்கு மாகாணத்தில் கிடைத்திருப்பதும் ஊர்ஜிதமாகிறது.**

கிழக்கு மாகாணத்தில் எல்லாமாக ஒன்பது தொகுதிகள் உள்ளன. இந்த ஒன்பது தொகுதிகளில் அம்பாறை, சேருவில ஆகிய இரண்டு சிங்களத்தொகுதிகள் தவிர— ஏனைய ஏழு தொகுதிகளிலும் தமிழர் விடுதலைக்கூட்டணியின் சார்பில் எட்டு வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இந்த ஏழுதொகுதிகளிலும் தமிழர் விடுதலைக் கூட்டணியை எதிர்த்து ஐக்கிய தேசியக்கட்சியும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் போட்டியிட்டன. ஏழு தொகுதிகளிலும் ஒவ்வொரு கட்சியும் பெற்ற மொத்த வாக்குகள் வருமாறு:-

த. வி. கூ. — 1,15,935
ஐ. தே. கட்சி — 94,306
சி. சு. கட்சி — 60,170

மேற்கண்ட விபரங்களிலிருந்து ஆகக்கூடுதலான வாக்குகள் பெற்ற இயக்கம் தமிழர் விடுதலைக்கூட்டணியே யென்பதும் ஐக்கியதேசியக் கட்சியை விட 21,630 வாக்குகள் த. வி. கூட்டணிக்கு கூடுதலாகக் கிடைத்திருப்பதும்தெளிவாகிறதல்லவா?

## தமிழினம் தனி.,.

—1-ம் பக்கத் தொடர்

வதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு தமிழ்ஈழ மக்கள் அளித்த மக்களாணை பற்றி வேண்டுமென்றே குறிப்பிடுவதைத் தவிர்த்திருப்பதையொட்டி இச்சபை கவலை தெரிவிக்கின்றது.

(அ) இலங்கையின் வடக்குக கிழக்கு பாகங்களில் தனியான, வரையறுக்கப்பட்ட பிரதேசங்களில் பாரம்பரியமாக வசித்து வருவதாலும்—

(ஆ) ஐரோப்பிய ஏகாதிபத்தியத்தினுல் வெற்றி கொள்ளப்படும் வரை பல நூற்றுண்டுகளாக தனியான இறைமையுள்ள மக்களாக வாழ்ந்துவந்த வரலாற்ருலும்—


(இ) புராதனப் பெருமை வாய்ந்த மொழிக்கும், கலாச்சாரத்திற்கும் நாகரீகத்துக்கும் பொதுச் சொந்தக்காரராக இருப்பதாலும்—

(ஈ) நமது பிரதேசத்தில் விவசாயம், கடற்ருெழில் முதலிய மூலவளங்களை அடிப்படையாகக் கொண்ட பொதுவான, பொருளாதார வாழ்வை உடைய மக்களாக இருப்பதாலும்—

(உ) தேசிய இனமாக தமது தனித்துவத்தைக் காத்து ஒன்றுபட்டு வாழத் தாம் பூண்டிருக்கும் உறுதியை நடந்துமுடிந்த தேர்தலில் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபித்திருப்பதாலும்—

இந்நாட்டுத் தமிழ்மக்கள் உலக நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட எல்லா வரைவிலக்காளங்களின் படியும் சுயநிர்ணய உரிமைக்கு மறுக்கமுடியாத உரித்துள்ள ஓர் தனித் தேசிய இனம் என்பதை அரசாங்க கொள்கை விளக்கக் கூற்று கவனத்திற்கெடுக்கத் தவறிவிட்டதையொட்டி இச்சபை கவலை தெரிவிக்கின்றது.

தமிழ் தேசிய இனம் இச்சுய நிர்ணய உரிமையை உபயோகித்து பூரண இறைமையுள்ள, தமிழ்ஈழ அரசில் சுதந்திர மக்களாக வாழத் தீர்மானித்து விட்டார்கள் என்பதை அரசாங்கம் உணர்ந்திருப்பதாகக் கொள்கை விளக்கக்கூற்று எல்லாவகையிலும் காட்டத் தவறியதையொட்டியும் இச்சபை வருத்தம் தெரிவிக்கின்றது.



## காசி ஆனந்தன் மௌன விரதம் பூர்த்தி!

தேர்தலுக்குப் பின்னர் தமிழின ஒற்றுமைக்கு ஊறு தேடும் வகையில் கிழக்கில் நடைபெற்ற பிரதேச ரீதியிலான வன்முறைச் சம்பவங்களைக் கண்டித்தும், தமிழீழ விடுதலைப்போராட்டத்துக்கு ஆத்மீகபலமும்தெய்வ பலமும் வேண்டியும் மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கேஸ்வரப் பிள்ளையார்கோவிலில் கவிஞர் காசி ஆனந்தன் மேற்கொண்டிருந்த மௌன விரதத்தை 10-8-77 புதன்கிழமை நிறைவுசெய்து கொண்டார். நாவலர் அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைமைப்பொறுப்பை ஏற்ற ஆகஸ்ட் 4ம் நாள் கவிஞர் தனது மௌன விரதத்தை ஆரம்பித்தார். மௌன விரதத்தில் காசி ஆனந்தன் அமர்ந்திருந்த ஏழுநாட்களும்நாள் தோறும் பல நூறு மக்கள் ஆண்களும் பெண்களும் ஆலயத்துக்கு வந்த காசி ஆனந்தனுக்கு தமது இதய வாழ்த்துக்களைத் தெரிவித்துசென்றனர்

## தமிழர் வகித்த இடத்துக்கு சிங்களவர்!

புதிய அரசாங்கம் வந்த பின்னர், நெடுங்காலமாக தமிழர்களே வகித்துவந்த இலங்கை மத்தியவங்கி நாணய சபை உறுப்பினர் பதவிக்கு முதன்முதலாக ஒரு சிங்களவர் நியமிக்கப்பட்டுள்ளார். இப்படி நியமிக்கப்பட்டவர் பண்டிதரத்தினு என்ற பட்டயம் பெற்ற கணக்காளர் ஆவர். 1950ம் ஆண்டுமுதல் நேற்று வரை ஜெகநாதன், தியாகராசா, ராஜேந்திரா ஆகிய தமிழர்களே நாணய சபையில் நியமன உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர். இந்த வழமை, புதிய அரசாங்கத்தினுல் மாற்றப்பட்டு, இப்போது சிங்களவர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிருர்.

## பஸ்தொழிலாளர் கழகம் மீண்டும் புனரமைப்பு

சில காலம் இயங்காமலிருந்த இலங்கை பஸ்தொழிலாளர் கழகம் மீண்டும் 31-7-77ல் புனரமைப்புசெய்யப்பட்டுள்ளது. கழகத்தின் புனரமைப்பு கூட்டத்திற்கு தமிழ் ஈழத்தின் பல்வேறு பஸ் டிப்போக்களிலிருந்தும் சுமார் 150 பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். பின்வருவோர் கழகத்தின் நிர்வாகிகளாக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். போஷகர்— மு. சிவசிதம்பரம் பா. உ, தலைவர்—வெ. யோகேஸ்வரன் பா. உ, உபதலைவர்— வே. சுப்பிரமணியம், ந. அருளானந்தம், செயலாளர் மு. ஆலாலசுந்தரம், துணைச்செயலாளர் — ரி. தங்கத்துரை, பொருளாளர் — சி. கதிரவேற்பிள்ளை பா. உ, துணைப் பொருளாளர் க. உருத்திர சுந்திரம் தற்காலிக செயற்குழு ஒன்றும் ஒவ்வொரு டிப்போவுக்கு ஒவ்வொரு பிரதிநிதி வீதம் தெரிவுசெய்யப்பட்டது.

மேற்படி கழகத்தின் இரண்டாவது கூட்டம் 14-8-77ல் கோண்டாவிலில் நடைபெறுகிறது.

## த. வி. கூட்டணி கொழும்புக் கிளையின் ஆண்டுக் கூட்டம்

தமிழர் விடுதலைக் கூட்டணி கொழும்புக் கிளையின் ஆண்டுப் பொதுக்கூட்டம் 31-8-77 மாலை 5.30 மணிக்கு இராமகிருஷ்ண (சிறிய) மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் நடப்பாண்டுக்கான புதிய செயற்குழு தெரிவு செய்யப்படும். செயற்குழுவுக்கான விண்ணப்பங்களையும், பொதுக் கூட்டத்தில் நிறைவேற்ற வேண்டிய பிரேரணைகளையும் 22-8-77க்கு முன்னர் கிளை செயலாளருக்கு அனுப்பி வைக்குமாறு உறுப்பினர் கோரப்படுகின்றனர்.

## ஓவியர் உரை

இலங்கை அறிவு இயக்கத்தின் சார்பில் கொட்டாஞ்சேனை விவேகானந்தா சபையில் 14-8-77 மாலை 5மணிக்கு நடைபெறும் இலக்கிய விழாவில் "கலைகளிலே ஓவியம்" எனும் பொருள்பற்றி ஓவியர்பெனடிக்ற் உரையாற்றுகிருர்.

## நுவரெலியாவில் இ. தொ. க. 10வது ஆண்டுக்கூட்டம்!

இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் 10வது ஆண்டுப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 14-8-77ம் திகதி காலை 10.00 மணிக்கு நுவரெலியா நகர மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது. இதற்கான ஏற்பாடுகளை கழகத்தின் நிர்வாகச் செயலாளர் திரு. கே. பி. எஸ். துரை மேற்கொண்டுள்ளார். இக்கூட்டத்தில் கழகத்தின் தலைவரான மூன்ருள் மூதூர் பாராளுமன்ற உறுப்பினர் திரு. அ. தங்கத்துரை, மன்னர் பா.உ. திரு. பி. சூசைதாசன், ஈழவேந்தன், ஆ. ரகுபதிபாலசிறீதரன், கோவை மகேசன், வண்ணை ஆனந்தன் ஆகியோர் உட்பட பல கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துக்கொண்டு சிறப்புரையாற்ற விருக்கின்றனர்.

அட்டனில் நடைபெற விருந்த மேற்படி கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களால் நுவரெலியா நகர மண்டபத்தில் நடைபெற விருப்பது குறிப்பிடதக்கது





இல்லத்தரசிகளின் இன்றைய தெரிவு

றோயல் பேக்கிங் பவுடர்

மற்றும் ஏனைய தயாரிப்புகள்

றோயல் ஜெலி கிறிஸ்டல்
றோயல் கஸ்ரட் பவுடர்
றோயல் கோண் பிளவர்
றோயல் பிஸ் மக்ஸ்
றோயல் நீலம்

தயாரித்து விற்பனை செய்வோர்

சிவா இண்டஸ்றீஸ்

112 1/3 4ம் குறுக்குத் தெரு கொழும்பு-11

மில்க்வைற் செய்தி-இதழ்20

10 மில்க்வைற் நீலசோப் அல்லது 2 நீம் வாசனை சோப் அல்லது 2 மில்க்வைற் மெடிக்கேட்டட்சோப் அல்லது 2 பார் சோப் மேலுறைகளை அனுப்பி மேற்படி செய்தியை பெற்றுக் கொள்ளுங்கள்.

விநியோகப்பகுதி:

மில்க்வைற் சவர்க்காரம் தொழிலக,
த. பெ. எண். 77
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது நாட்டில் நாம் நாமாக வாழ்வோமா?

ஒரு மொழி இன்னொரு இனத்தினரிடம் பரவுமானுல் அதற்கு இரண்டு காரணங்கள் இருந்தேயாகவேண்டும். அந்த மொழி இலக்கிய வளம் நிறைந்ததாக இருக்க வேண்டும் அல்லது அது அன்னுரின் ஆட்சி மொழியாக இருக்கவேண்டும்.

தமிழைப் பொறுத்தமட்டில் வேற்று நாடுகளில் அதை ஆட்சி மொழியாகத் திணிக்கவில்லை. ஆனுல் தமிழ மணம் வீசாத உலக நாடுகளில் எல்லாம் தமிழ் ஆட்சி செய்து கொண்டிருக்கிறது. தமிழைப் படிக்காமலே தமிழுக்குள் புகுந்து தமிழின் இனிமையையும் அதன் உயர்வையும் தமிழின் கருத்தாழத்தையும் அனுபவிக்கிருர்கள். ஆம், திருக்குறள் என்ற தமிழ் மறையை தங்கள் தாய்மொழிகளில் படிக்காத நாடுகளே உலகத்தில் இல்லை எனலாம். — அது மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. அத்தகைய பெருமை தமிழுக்கு உண்டு! தமிழனுக்கு உண்டு!

இலங்கையைப் பொறுத்தமட்டில் தமிழர் இந்நாட்டின் பூர்வ குடிகள். தமிழ் மொழி எப்பொழுது, எங்கே தோன்றி வளர்ந்தது என்பதை எந்த ஆராய்ச்சியாளர்களாலும் கூறமுடியவில்லை. 'கல் தோன்றி மண் தோன்ருக் காலத்தே முன் தோன்றி மூத்தகுடி' என்று மட்டும் கூறுவார்கள். இப்படி மூத்த குடியினள் நம் முத்தமிழ் அன்னை.

இங்கு விசயன் என்ற காவாலி வந்தபோது இங்கு வாழ்ந்தவர்கள் இயக்கரும் நாகரும் ஆவர். இலங்கை முழுவதும் பரவியிருந்த இப்பூர்வ குடிகள் சைவசமயத்தினர் என்றும் திராவிட இனத்தினர் என்றும் 'மகாவம்சம்' கூறுகிறது.

'சிங்களவரின் நாகரிகம், சமயம் தமிழ் மக்களுடையதைப் பெரும்பாலும் ஒத்துள்ளன. அவர்களுடைய மொழி மகத நாட்டு மொழியும், தமிழும் கலந்துள்ளது' என்று 'பிறிற்ரே' என்னும் மேனுட்டு வரலாற்று ஆசிரியர் கூறுகிருர். விசயன் இலங்கைக்கு வருமுன்னர் இங்கு வாழ்ந்த மக்கள் தமிழர் என்பது சரித்திர உண்மை.

வெள்ளைப் பறங்கியர் இந்த நாட்டுக்குக் காலடி எடுத்து வைக்கு முன்னர் இலங்கையின் பெரும் பகுதியை ஆண்டு கொண்டிருந்தவர்கள் தமிழர்கள். கோட்டேக்கு அரசனுக இருந்தவன் மகா சங்கபோதி புவனேக பாகு என்பவன். இவனுடைய உண்மைப்பெயர் செண்பகப்பெருமான். நல்லூர் கந்தசாமி கோவில் மூல பீடத்தில் இவன் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. கண்டியை ஆட்சி செய்தவன் சிறீவிக்கிரம ராசசிங்கன் இவன் பெயர் கண்ணப்பன் யாழ்ப்பாணத்தை அரசு செய்தவன் சங்கிலியன் இவனது ஆட்சி மன்னுர், புத்தளம், சிலாபம் எங்கும் பரவி நல்லூரை இராசதானியாகக் கொண்டிருந்தது.

துப்பாக்கி, பீரங்களுடன் வந்த அன்னியப் பறங்கிகளிடம் ஏனைய சிங்கள மன்னர்கள் மண்டியிட்டுச் சரணுகதி அடைந்த நேரத்தில், அவர்களை எதிர்த்துக் கடைசி வரை போராடி தாய்நாட்டு மண்மீது முடிசாயப் பிணமாக விழுந்தவர்கள் தமிழர்கள் என்பதைச் சரித்திரம் சொல்லும்.

காட்டிக்கொடுப்பதற்கு ஒரு துரோகி காக்கை வன்னியன் இல்லையென்ருல் சங்கிலியன் பெருமை நமக்கெல்லாம் பெரிதாகத்தெரியாது! எகலப்பொல என்ற இழிந்தவன் ஒருவன் இல்லையென்ருல் கண்ணப்பன் பெருமையும் அவ்வளவு உயராதல்லவா?

இதே போலவே, இன்று நம்மிடையே செல்லாக் காசாகிவிட்ட சூரியர், தியாகர், அருளர் கும்பலின் துரோகங்களும் வாழ்ந்து கொண்டு இருக்கப்போகின்றன.

வெள்ளைப் பறங்கியர் ஆட்சியைக் கைப்பற்றிய பிறகு ஒரே நிர்வாகத்தின் கீழ் இலங்கை முழுவதையும் கொண்டு வந்த கதையும் நாடறியும்! உலகுக்குத்தெரியும்!

அண்டை நாடான இந்தியாவிலே காந்தியார் கொடுத்த தலையிடி தாங்க முடியாமல் அந்நாட்டை விட்டுக் கப்பல் ஏறும் பொழுது இந்த நாட்டையும் விட்டுப்போக வேண்டிய நிர்ப்பந்தம் வெள்ளையருக்கு ஏற்பட்டது —வெள்ளையர் வெளியேறினர்.

நாற்பத்தெட்டில் நாம் பெற்றது சுதந்திரமாம்!

வெள்ளையன் இந்த நாட்டை விட்டுப்போகின்ற நேரத்திலே நமது தமிழ் நாட்டை நம்மிடம் கொடு என்று தட்டிக்கேட்டிருந்தால் அவன் அப்படிச்செய்திருப்பான். இப்படித்தான் இந்தியாவைப் பிரித்துப் பாகிஸ்தான் வேண்டும் என்ருர் ஜின்னு. அது கிடைத்தது. ஆனுல் இங்கு அப்படி எவரும் கேட்கவில்லை. அதற்குக் காரணமும் இல்லாமல் இல்லை.

வெள்ளையன் ஆட்சிக் காலத்தில் பெரிய நிர்வாகப் பொறுப்புக்களில் எல்லாம் இருந்தவர்கள் தமிழர்கள். அவர்களுக்கு நிறைய வேலை வாய்ப்புக்கள் இருந்தன. இது இப்படியே தொடர்ந்தும் இருக்கும் என்று தப்புக் கணக்குப் போட்டுவிட்டார்கள் அன்றைய தமிழர்கள் என்றே கருதவேண்டும். வெள்ளையன் போட்ட கணக்கு வேறு. தமிழர்கள் எதிர்பார்த்த முடிவுவேருகி விட்டது.

வெள்ளையன் அன்னியன் பெரும்பான்மைச் சிங்களவர்களுக்கு பொறுப்பான நிர்வாகங்களைக் கொடுக்கவில்லை. அப்படிக்கொடுத்தால் சிறுபான்மையாக உள்ள மற்ற இனங்களை அவர்கள்சேர்த்துக்கொண்டு தங்களையே எதிர்க்கக் கிளம்பக்கூடும் என்ற நரிக்குணம் வெள்ளையருக்கு இருந்தது. ஆகையினுல் சிறுபான்மையினருக்கு அதிகாரங்கள் வழங்கினுர்கள். அப்படி வழங்கினுல் சிறுபான்மையினரை முதலில் எதிர்ப்பார்கள். அப்பொழுது சிறுபான்மையினர் தங்களுக்கு உதவுவார்கள் என்று பிரித்தாளும் சூட்சியில் வல்லவர்களான வெள்ளையர் செயற்பட்டனர்.

நாற்பத்தெட்டுக்குப் பின் வெள்ளையன் படிப்பித்த பாடத்துக்கு அப்பாலும் அப்பால் போய்விட்டார்கள் சிங்களவர் தமிழர்களை ஆட்டிப்படைத்து ஆதிக்கம் செலுத்துகிருர்கள். பொறுக்கமுடியாத அளவுக்கு அநியாயம் செய்கிருர்கள்.

பாண்டாரநாயக்கா பிரதமரான பின் தமிழர்கள் அடைந்த இன்னல்கள் கொஞ்சமல்ல! தகுதி உள்ள அரசாங்க ஊழியர்கள் எல்லாம் தள்ளப்பட்டார்கள் சிங்கள வெறிபிடித்த உதவாக்கரைகளுக்கு மேலிடம் கொடுக்கப்பட்டது. தமிழர்களுக்குப் பதவி உயர்வுகள் மறுக்கப்பட்டன. சம்பள உயர்வும் அப்படியே!

தமிழ் இளைஞர்களின் உயர் படிப்புக்கு இடமில்லாமல் செய்தார்கள். தரப்படுத்தல் என்ற அநியாயத்தால் நூற்றுக்கு நூறு புள்ளிகள் எடுத்தாலும் பல்கலைக் கழகத்துக்குப் போகமுடியாது! இப்படிச் செய்வதால் தமிழ் மாணவர்கள் மூளைசாலிகள் என்பதையும் அப்படித்தடுத்து நிறுத்துவதால் அவர்கள் சிந்தனையை மழுங்கடித்து விடலாமென்றும் எண்ணிவிட்டனர் போலும்! 'இம்' என்ருல் இளைஞர்களுக்குச் சிறைவாசம் வேறு...

ஊர்ப் பெயர்களில் தமிழ் ஒழிப்பு, போக்குவரத்துச் சாதனங்களில் தமிழ் இல்லை. அலுவலகங்களில் தமிழ் அடியோடு ஒழிப்பு. தமிழருக்கு எழுதும் கடிதம் தனிச் சிங்களம்.

இவைகளைவிட, தமிழ் இடங்களில் விளைந்த உணவுப் பொருட்களை தமிழ்ப் பகுதிகளுக்குள்ளேயே எடுத்துச் செல்லத் தடை சிங்கள இடங்களில் ஒவ்வொரு நாளும் பாண் கொடுக்கப்பட்ட அதே நேரம் தமிழ்ப் பகுதிகளில் கிழமைக்கு ஒரு நாள் அரை இருத்தல் மட்டும் கிடைத்தது.

இவைமட்டுமா, தமிழ் ஈழத் தலைநகரில் கொத்து அரிசி பன்னிரண்டு ரூபாய் விற்ற நேரத்தில் 'தமிழர்கள் பணக்காரர்கள். எவ்வளவு விற்ருலும் வாங்குவார்கள்'' — இப்படி ஆணவத்தோடு பேசிய சிங்கள ஆட்சியாளர்களை நாம் மறக்கமுடியுமா? மலைநாட்டுத் தமிழர்கள் புல்லுக்கொட்டைகளைத் தின்று உயிர்வாழ வேண்டிய அவல நிலைக்குக் கூடத் தள்ளப்பட்டார்கள்.

இனக்கலவரங்களை மூட்டி தமிழர்களின் சொத்துக்களைக் கொள்ளையடித்து, உயிர்களைப் பலிவாங்கி, பெண்களின் கற்பினைச் சூறையாடியும் மகிழ்ந்தார்கள்.

இப்படி எல்லாம் அவர்கள் செய்தார்கள். ஆனுல் நீதிதேவன் முன் அதற்குக் [illegible] [illegible] தான் இல்லை. தமிழரைக் காப்பது தமிழரின் நீதியே!

பிரதமர் பண்டாரநாயக்கா சுடப்பட்டபோது, எவ்வளவு நேரம் இனக்கலவரத்தைப் பார்த்துக் கொண்டுபேசாதிருந்தாரோ அதே அளவு நேரம் கிடந்து அவஸ்தைப்பட்டே அவர் உயிரும் பிரிந்தது. அந்த இனம் செய்த அட்டூழியங்களுக்கெல்லாம் வட்டியுடன் நீதிதேவன் திருப்பிக் கொடுத்ததை பயங்கரவாத இயக்க நேரத்தில் அறிந்திருக்கிறேம்.

அடக்குமுறையால் எவரையும் அரசாள முடியாது. பயங்கர ஆயுதங்களைக் காட்டி ஆள எண்ணுவது முட்டாள்தனம். கோல் செங்கோலாயிருந்தால், நீதி தவருது இருக்குமானுல் அதுவே நிலையான ஆட்சியாகும். — இது தமிழர் கண்ட அரசியல் நெறி.

தமிழர்களுக்கு இப்படி எல்லாம் ஏற்படும் என்ற தீர்க்கதரிசனத்தை முன்கூட்டியே கூறிவந்த ஞானி தமிழர் தந்தை அமரர் செல்வா அவர்கள். 'தமிழன் தன்னைத்தானே ஆளவேண்டும்' —இதுதான் அந்த ஞானியின் கடைசி ஆசை! அதை நிறைவேற்றுவதற்காக தமிழ் இனமே ஒன்றுபட்ட தீர்ப்பை வழங்கி விட்டார்கள். இளைஞர் படை முன்பந்தியில் நிற்கிறது...

நடந்துமுடிந்த தேர்தலில் தமிழர் நிலை ஒரு திருப்பு முனையில் நிற்கிறது என்பதை நாம் உணரவேண்டும். வரலாறு காணுத வகையில் எதிர்க்கட்சித் தலைமையை தமிழர்கள் அடைந்துவிட்டார்கள். இது தமிழ் ஈழத்தின் வெற்றிக்கு அறிகுறியாகக் கிடைத்த சுப சகு

**"நடமாடி."**

னம்! படை நடத்தும் பொறுப்பு தானைத்தலைவன், படைத்தளபதி அமிர்தலிங்கன் கையில்! கட்டளைக்காகக் காத்திருக்கிறது இளைஞர் படை...!

"தமிழர்களின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டியது ஒன்று'' என்று தற்போதைய பிரதமர் கூறுகிருர். இது தமிழர்களுக்குப் புதிதல்ல! கடந்த காலங்களில்எல்லாம் தமிழர்களுக்கு நம்பிக்கை காட்டி ஏய்த்துவிட்டார்கள். அத்தகைய பம்மாத்து இனி தமிழர்களில் பலிக்காது; வாய்க்காது! அதை ஒவ்வொரு சிங்களவனின் நெஞ்சங்களிலும் ஆணி அடித்து வைத்தவர் எமது அரசியல் ஞானி. அவர் ஆத்மா தமிழர்கள் மத்தியிலே சுற்றிச் சுழன்று கொண்டிருக்கிறது!

தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமென்ருல்—சிங்களவனைப்போன்று தமிழன் வாழக்கூடிய வகையில் வழி அமைத்த பின்னுல் அதற்கு ஒத்துப்போகத் தமிழன் சம்மதத்தை தெரிவிப்பதில் தவறில்லை என்றே கருதுகிறேன்.

தமிழும் சிங்களமும் ஒவ்வொருவரும் படிக்கவும், திறமை அடிப்படையில் சகல துறைகளுக்கும் ஆள் சேர்க்கவும், சொந்தப் பிரதேசங்கள் பாதுகாக்கப்படுவதாகவும் இருந்தால் மட்டுமே ஒன்றுபட்ட இலங்கை என்ற பேச்சுக்கு இடமளிக்கலாம்! இவை தவிர்ந்த மற்ற எதுவுமே தமிழரை மீண்டும் படுகுழியில் வீழ்த்திவிடும்!

மறுபுறத்தில், அகிம்சை வழியில் போராடி நாம் வெற்றி பெறலாமென நினைப்பது தவறு. நீதிக்குப் பயந்தவர்கள் அகிம்சைக்கு மதிப்புத்தருவார்கள். ஆனுல் நீதியைக்கொன்றவர்களிடம் அகிம்சைக்கு இடமேது? கடந்த கால நடவடிக்கைகளைக்கொண்டும் அவைகளின் பெறுபேற்றை வைத்தும் நாம் செயல் புரிய வேண்டும்.

தமிழ் ஈழம் அமைப்பதே நமது நோக்கமென்ருல் அதற்குப் படை இல்லாமல் இருக்குமா? உலகத்துக்கே அரசியல்தத்துவம் படைத்த வள்ளுவப் பெருந்தகை சொன்ன படையைப் பயன் படச்செய்யலாமே!

சிங்களவர்க்கிடையில் எழுபத்தொன்றில் நடந்த கிளர்ச்சியை நாம்அறிவோம் அக் கிளர்ச்சிக்காரர்கள் எவ்வளவு பெரிய பயங்கரவாதிகளாக அரசாங்கத்துக்குத் தோற்றினுர்கள். சில இடங்களில் மாதக் கணக்காக கிளர்ச்சிக்காரர்களே அரசாங்கம் நடத்திருர்களே...! பிறநாட்டு உதவியுடன்தான் அவர்களை அடக்கமுடிந்தது அரசுக்கு.

தமிழர்களிடம் நீதி இருக்கிறது. எமது கோரிக்கை நியாயமானது. தமிழர் மற்றவர்களை ஆளநினைக்கவில்லை. மற்றவர் நாட்டைப் பிடிக்க வென்றுபோர் தொடுக்கவுமில்லை. நமது நாட்டில், நாம் நாமாக வாழ நினைப்பது தவரு?

ஒரு குடும்பம் சில பிள்ளைகள் அவர்கள் வளர்ந்து வருகிருர்கள். அந்தப்பிள்ளைகள் மீது தந்தை ஆதிக்கம் செலுத்துகிருர். எத்தனை நாட்களுக்கு? முதற்பிள்ளை விவாகம் செய்துவிட்டான் மனைவியோடு பேசுவதற்கும் தந்தையின் ஆதிக்கம் குறுக்கே நிற்குமானுல்...

ஒரு மகனுக்கும் தந்தைக்கும் கூட எழுதாத ஒப்பந்தம் உண்டு — எவ்வளவு காலம் ஒரு மகனைக் கட்டுப்படுத்த முடியும்—எந்தவரை அறிவுரை சொல்லவேண்டும் — எப்பொழுதிருந்து அவன் நடவடிக்கைகளில்

—8-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கை நீ உணர்வாய்! கிழக்கே நீ வெல்வாய்!

தன்னை மறந்த நிலையில் அபரிமிதமான பெருமனத்தோடு வாழ்ந்த ஒரு இனமாக தமிழினம் வாழ்ந்த நிலையினை... இலங்கையின் தேசிய இனமான தமிழ் பேசும் மக்கள் இரண்டாந்தரப் பிரசையாக்கப்பட்டதை உற்றுநோக்குமிடத்து உணரத் தக்கதாயிருக்கிறது.

உண்மையான மொழிப்பற்று, இனப்பற்று அற்ற சிந்தனையோட்டம் கொண்டு சிலர் விதைத்த விதைகள் இன்று கிழக்கீழத்தில் பரவியிருப்பதை நடந்து முடிந்த தேர்தல் வெளிக்காட்டுகிறது. யாழ் மாவட்டமெங்கனும் த. வி. கூ. உறுப்பினர்கள் வெற்றிவாகை சூடியிருப்பதை ஆராய்ந்து கிழக்கைப்பொறுத்தவரை அடிப்படை இயக்க சிந்தனையில் போதிய வளர்ச்சியின்மையை உணரக்கூடியதாயிருக்கிறது.

"நாம் பேசும் மொழிவாழ வேண்டுமேயானல் எமது பாரம்பரிய பூமி காப்பாற்றப்படவேண்டும்." எனும் கருத்தின் நடைமுறை அனுகூலங்களை இன்னும் விளங்காத நிலையில் உள்ள ஆயிரக்கணக்கான மக்கள் வாழும் பகுதியாக கிழக்கீழம் இருப்பதை எண்ணி வேதனைப்படாமலிருக்கமுடியாது.

அதிகாரங்கள் யாவும் பெரும்பான்மையரிடம்; அதன் மூலம் சிறுபான்மை மக்களுரிமை (மொழிஉரிமை மத உரிமை, குடி உரிமை) கட்டுப்படுத்தப்படுகிறது — பறிக்கப்படுகிறது. இது ஒரு நடைமுறைச் சித்தாந்தம் என்றே சொல்லலாம். கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை ஆயிரக்கணக்கான சதுரமைல் தமிழர் பூமி பறிக்கப்பட்டு இரண்டு சிங்களத்தொகுதிகளும் உருவாக்கப்பட்டிருப்பது கண்கூடு. ஆனல் தமிழ் பேசும் மக்கள் தம் பாரம்பரிய பூமியிலேயே சென்று குடியேறுவது அத்துமீறிய சட்ட விரோத குற்றச்செயலாகக் கணிக்கப்படுகிறது.

ஒரு இனத்தின் பாதுகாப்பு வளர்ச்சி எந்த நிலையிலாவது பாதிக்கப்படுமிடத்து அந்த இனம் அழிவுப் பாதைக்கு வித்திடப்படுவதை மறந்த நிலையில் கிழக்கு மாகாணத்தின் அரைவாசிப்பகுதியினர் குறிப்பாக முஸ்லிம் இனத்தவர் ஏனே வாழும் நிலை கவலைக்குரியது.

கால் மாக்ஸ் கூறினுன் மதம் அபின் என்று. அதைத் தொடர்ந்து இலங்கை அரசில் பீட்டர்கெனமன் அவர்கள் அதைச் சொன்னர். ஆனல் நாட்டிலே பௌத்தம் அரசமதமாக இருக்க வேண்டுமென்று வாதாடி வெற்றிபெற்ருர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அவர்கள் அதை நாம் எதிர்க்கவில்லை. சிறுபான்மை மக்களின் குடிஉரிமை, மொழி உரிமைகளைக் பறிக்கவேண்டாமென்றுதான் கோரிக்கை விடுத்தோம்.

1215ம் ஆண்டு முதல் 1619ம் ஆண்டுவரை பிரிந்து வாழ்ந்த சரித்திரத்தை மறந்து சேர்ந்து வாழ்ந்தோம். விளைவு என்ன? சிங்கள சிறிலங்காவில் இரண்டாந்தரப் பிரசைகள். தனியாட்சி நடத்திய ஒரு இனம் தமிழினம் அடிமைப்படுத்தப்பட்டு ஆளப்படுமினமாக மாற்றம் பெற்ற கதை— தமிழ்பேசும் மக்களின் கண்ணீர்க் கதை என்பதை ஏனே கிழக்கீழ மக்கள் சிலர் சிந்திக்க மறுப்பது விந்தையானது — வேதனைப் படக்கூடியது.

ஒரு பக்கம் அம்பாறையினூடாக சிங்கள மக்கள் கிழக்கின் தமிழ் மண்ணைப் பிடித்துக்கொண்டுவர மறுபக்கம் திருகோணமலையினூடே, சேருவலயினூடே கிழக்கின் பாரம்பரிய தமிழ்ப் பூமியை ஆக்கிரமிக்க மத்தியிலே மட்டுநகரிலே அவர்கள் ஆதிக்கம் செலுத்த தமிழ்பேசும் சந்ததியின் நெருக்கமான—அடக்கமான உறவு நாளும் பொழுதும் பிரிக்கப்படும் ஆபத்தை இன்னும் உணர்ந்தும் உணராத நிலையில் கிழக்கு வாழ் தமிழ்பேசும் மக்கள் கதையினை, எண்ணிப்பாராத உணர்வினை எண்ண எண்ண உள்ளம் விம்முகிறது.

தமிழ் பேசும் மக்கள் உரிமைக்கு உழைக்கும் கிழக்கின் மூத்த தலைவர்கள் விடுதலைக் குரலாக நின்று உழைக்காத உணர்வினைத்தான் இது பிரதிபலிப்பதாகக்கொள்ளவேண்டும். மனவருத்தப்படவேண்டிய விடயம்தான்.

சிறு சிறு பலவீனங்கள் பெரிய பிளவுகளையும் ஒற்றுமையின்மையும் ஏற்படுத்துவதைத் தவிர்க்கமுடியாது.

ஒரு சிறு துவாரம் பெரிய கப்பலையே கடலில் மூழ்கடிக்கிறது. இது நடைமுறை உண்மை.

பாதிக்கப்பட்ட நிலையிலே —தன்னைச் சார்ந்த இயக்கமொன்றினை மக்கள் ஆதரிக்க மறுப்பது ஆச்சரியமானதுதான். கிழக்கீழம் பொருளாதார ரீதியில், குடியுரிமை ரீதியில், நிருவாக ரீதியில் பாதிக்கப்பட்டிருந்தும் பொதுவாக சுதந்திர உணர்வுபெறப்படாத ஒரு பிரதேசமாக இருப்பதை மெலெழுந்தவாரியாகசொல்லித்தான் ஆகவேண்டியிருக்கிறது. இவைகளின் உண்மைத் தாக்கத்தினை — பூதாகாரமான பாதிப்பினைக் கோடிட்டு மக்கள் முன் காட்டுதற்கு மேலும் பலவித வழிவகைகளை இயக்கரீதியில் ஆராய்ந்து தலைவர்கள் செயற்படுத்தவேண்டும். சுயநலம், பலவீனம், மொழி கலாசாரப் பற்றின்மை போன்ற அடிப்படைக் காரணிகளைக் களையவேண்டும். ஒவ்வொரு மனித ஜீவனையும் பிறருக்காக வாழும் தன் சமூகப்பற்று மிக்க உயிரினமாக வாழும் மேம்பாடு பெறும் வண்ணம் இயக்க ரீதியிலான மன உணர்வினை ஏற்படுத்தவேண்டும்.

சுதந்திர தமிழீழப் போராட்ட நிலைக்கு முன்னர் கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை தலைவர்கள் மக்களுடனுன நேரடித் தொடர்பினை வலுப்படுத்த வேண்டும். அதற்கான திட்டங்களை வகுக்க வேண்டும். குறிப்பாக முஸ்லீம் இன மக்கள் தொடர்பை ஏற்படுத்தி அவர்களது அணைப்பைப் பெறவேண்டும். தமிழ் பேசும் மக்களது நாளைய எதிர்காலத்தை அரசியல் அமைப்பு ரீதியில் பெரும்பான்மைக் கட்சிகளின் கொள்கை ரீதியில் அம்பலப் படுத்த வேண்டும். மக்கள் தொடர்பு நெருக்கமற்ற நிலையிலே மொழிப்பற்று, இனப்பற்று நிலை அற்றதாகி விடுகிறது. எனவேதான் உறவை வலுப்படுத்த பலவீனம், சுயநலம் பறந்தோடுகிறது. இலட்சியம் மேலோங்குகிறது.

கிழக்கைப் பொறுத்தவரை பிரதேசவெறி தவிர்க்கப்படாதவிடத்து — பரவலான இயக்க சிந்தனை, சேவை மனப்பான்மை ஒரு முகப்படுத்தப்படாதவிடத்து உண்மை இலட்சியம் ஈடேறுவதென்பது முயல் கொம்பாகத்தான் இருக்கும்.

ஒரு சாதாரண மனித இயக்க ஆர்வம் — விடுதலை உணர்வு அவனை வழிநடத்தும் தலைவனது உளப்பாங்கின்படி செல்லும். சிலவேளை அது உக்கிரமான தவிர்க்க முடியாத வீரக்கனலாகவும் மாறலாம். அன்றேல் அழிந்தொழிந்து 'தானுண்டு தன் பாடுண்டு' எனும் நிலைக்கும் மாறலாம். துர்அதிர்ஷ்டவசமாக சமுதாயத்தினின்று உருவாகி நிற்பதைக் காணக் கூடியதாயிருக்கிறது. சுதந்திர உணர்வுக்குப் பதிலாகப் பிரதேச வெறி தாண்டவமாடுகிறது. இதனை நன்கு அவதானித்து விடுதலைப் பாதைக்கு வழி அமைக்க வேண்டுமேயல்லாது வெறுமனே விட்டுவைக்கக் கூடாது.

சுவரிலே தெரிகின்ற வெடிப்பினை சாந்து பூசி மறைத்து விடலாம். ஆனல், எந்நேரமும் அது இடிந்து விழக்கூடும் என்பதை மறப்பது மடமை.

இந்த நிலையிலே சுவரின் அழகையும் பாதுகாப்பையும் நிலையானதென்று கொள்ள முடியாது. இதைக் கிழக்கு மாகாணத்தை உற்றுநோக்கும் ஒவ்வொரு விசுவாசமிக்க தமிழனும் உணரத் தலைப்படவேண்டும் — முடிவைச் செயற்படுத்தியாக வேண்டும்.

தமிழனுக்கு— தமிழ்நாடு, சுதந்திர ஆட்சி — ஆளும் உணர்வு வேண்டும் என்பதை தமிழ்பேசும் மக்கள் சிலர் வெறுக்கிருர்கள் என்ருல்; தமிழன் நானூறு ஆண்டுகள் ஆட்சி செய்த பூமியை-ஆட்சியை மீண்டும் எடுக்கக் குரல் கொடுக்கிருர்கள்; அது வேண்டாமென்று ஆதரிக்கச் சிலர் வாழுகின்ருர்கள் என்ருல்; மீண்டும் ஆளும் உணர்வு பெறுவதைப் பிரிவினை என்று கூறச் சிலர் இருக்கிருர்கள் என்ருல் நாம் சற்றுச் சிந்திக்கத்தான் வேண்டும்.

அவர்களது ஆத்மா சுதந்திர உணர்வினை இழந்த காரணத்தை அறிந்து அடிமை இருள் அகற்ற முயற்சி எடுக்கத்தான் வேண்டும். இதனை தமிழ்ஈழ விடுதலை இலட்சியவாதிகள் கவனத்திற்கெடுத்து வெற்றி சேர்ப்பதாக.

—தேனுடன்

# செயலாற்று அல்லது செத்துமடி!

ஆமாம் தோழா, காந்திஜியின் கூற்றுஇது; அண்ணு அடிக்கடி உச்சரிக்கும் வசனம் இது; அன்னூர் நமக்குக் கற்றுத்தந்த அரிய பாடம். நாம் செயலாற்றுவதற்கு இதுதான் தக்க தருணம். இதை நழுவவிட்டோமேயானல், செத்துமடிவதுதான் வழியேயன்றி வேறு வழியில்லை,

காலம் வரும் காலம் வருமென்று காத்திருந்தோம்; அது வந்துவிட்டது. இன்னும் நாம் தாமதித்தால் இனி நமக்கு இங்கே வாழ்வு கிடையாது என்பதற்கு இலக்கணம் அதுவாகத்தான் இருக்கவேண்டும். எனவே புறப்படு; செயல்படு.

கல்தோன்றி மண்தோன்ருக் காலத்தின்முன்தோன்றி மூத்த தமிழ்த்தாயைக் காப்பாற்ற நீ செயலாற்று அல்லது செத்துமடி,

அகத்தியன் இலக்கணத்தால் அவனியெங்கும் புகழ் சேர்த்த தமிழ்த்தாயைக் காப்பாற்ற நீ செயலாற்று அல்லது செத்துமடி.

வள்ளுவனை உலகுக்களித்து வானுயர்ந்த புகழ்படைத்த நம்பினிய தமிழ்த்தாயைக் காப்பாற்ற நீ செயலாற்று அல்லது செத்துமடி,

மூவேந்தர் அரவணைப்பில் மகிழ்ந்திருந்து, அரியணையமர்ந்து இசைபாடிய நம் பாரிய தமிழ்த்தாயைக் காப்பாற்ற நீ செயலாற்று அல்லது செத்துமடி.

பாவேந்தர் பன்னூறுபேர் பாட்டிசைக்கக் கேட்டிருந்த நம் பைந்தமிழ்த் தாயைக் காப்பாற்ற நீ செயலாற்று அல்லது செத்துமடி:

கடல் கடந்து நாடாண்டு புகழ் சமைத்த நம் உயர்ந்த தமிழ்த் தாயைக் காப்பாற்ற நீ செயலாற்று அல்லது செத்துமடி.

இமயத்துச்சியில் கொடி பொறித்த நம் எழில்தமிழ்த் தாயைக் காப்பாற்ற நீ செயலாற்று அல்லது செத்துமடி.

தாய்க்குப் பழி; ஆமாம் தமிழ்த்தாய்க்கு இன்று பழி. அவளது உடலிலே தழும்புகள் உயிருக்கு ஆபத்து. இன்னுமா தாமதம்? என்னரும் தோழா எழுந்திடு; ஏறென வாழ்ந்த வரலாற்றினைத் திருப்பிடு.

நந்தமிழ்த்தாயின் கண்களில் பெருகும்கண்ணீரைத் துடைத்திட நீ செயலாற்று அல்லது செத்துமடி.

செந்தமிழ்த்தாயின் துயரினைப்போக்கி, அன்னவள் மீண்டும் அரியணை ஏற,செயலாற்று அல்லது செத்துமடி.

தலைவிரி கோலமாய்த் தவித்திடும் நம் உயிர்த் தாயின் அழிவினைத் தடுத்திட நீ செயலாற்று அல்லது செத்துமடி.

நீதியற்ற நீசர் தம் சதியால் வீதியோரத்தில் நம் உயர்தாய் நின்றிடும் அவலம் வந்திடாதிருக்க நீ செயலாற்று அல்லது செத்துமடி.

உறக்கம் விட்டெழு! உன்னையே அர்ப்பணி! மறக்குலத் தமிழர் தம் மாண்பினை உரைத்திடு. மண்டியிட்டதெம் வரலாற்றில் இல்லையென்றஉண்மையைச் சொல்விடு.

விடுதலைக்கு நாள் வந்துவிட்டது! வீரன் நீ! தேர்தல் முடிந்துவிட்டது இனி உன் திறமையை யெல்லாம் ஒன்றுதிரட்டிச் செயல்படு. தேர்தல் வெற்றி, அடிக்கல் நாட்டப்பட்டிருக்கும் தமிழீழ கோட்டைக்கு அத்திவாரம் என்பதை மட்டும் மறந்துவிடாதே;

—(செல்வன் கே. கே. பீதாம்பரம் ஏருவூர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது

## தனிநாடு நிறு...

—1-ம் பக்கத்தொடர்

கொண்டதும் செல்வச் செழிப்பு மிகுந்ததுமான திருகோணமலையை தமிழ் ஈழத்தின் தலைநகரமாக ஏற்கெனவே தமிழர் கூட்டணி தெரிந்தெடுத்துவிட்டது. கூட்டணியின் உறுப்பினர்கள் அனைவரும் விரைவில் கூடி தேர்தலுக்குப் பின்னல் தாங்கள் பின்பற்றவிருக்கும் இராசதந்திர நடவடிக்கைகளையிட்டுதிட்டம் தீட்டுவதுடன், சுதந்திர தமிழ்ஈழத்துக்கான அரசியலமைப்பையும் உருவாக்குவார்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணி தனது சுதந்திரப் போராட்டத்தை சட்ட மறுப்பு இயக்கத்துடன் ஆரம்பிக்கவிருக்கிறது.

"சாத்வீகமான போராட்டங்களுடனேயே எமது விடுதலை இயக்கம் ஆரம்பமாகின லும், நான் திட்டவட்டமாகக் கூறுகிறேன் — விரைவாகவோ அல்லது பின்னரோ நாம் தீவிர போராட்டங்களில் இறங்கியே தீர வேண்டிய கட்டம் ஏற்பட்டே தீரும். எங்களில் பலர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்படலாம்; ஏன் தூக்குக் கயிற்றையும் முத்தமிட நேரிடலாம்."

இவ்வாறு கூட்டணி செயலதிபர் திரு. அமிர்தலிங்கம் கடுமையான வார்த்தைகளினல் கூறினலும், இந்த அளவுக்கு நிலைமை ஏற்படும் என்று கூட்டணித் தலைவர்கள் கருதவில்லை—

உலகின் இயற்கைத் துறைமுகங்களில் ஒன்ருன திருகோணமலையை தங்கள் தமிழ்ஈழ நாட்டின் தலைநகரமாகத் தேர்ந்தெடுத்ததன் மூலம், ஐக்கிய அமெரிக்கா, சோவியத் ரஷியா, போன்ற வெளிநாட்டு வல்லரசுகளின் கவனத்தை தங்கள் கோரிக்கையின்பால் திருப்பமுடியுமென்று தமிழர்கள் கருதுகிருர்கள்.

## நமது நாட்டில்...

—6-ம் பக்கத் தொடர்

தலையிடாது இருக்கவேண்டும்—இப்படி!

ஒரு குடும்பத் தலைவனுக்குப் பிள்ளை அடங்கி வாழ வேண்டியதுதான்! அது எவ்வளவு காலத்துக்கு? அடித்து வளர்க்கவேண்டியது தந்தையின் கடமை! அது எதுவரை? அடி வாங்கி வாங்கி அலுத்துப் போன மகனே ஒரு நாளைக்குத் தந்தையென்பதையும் மறந்து திருப்பி அடிக்குமளவுக்கு வந்துவிடுகிருன். குடும்பம் பிரிந்து இரண்டாக வாழுகிற நிலைக்குத் தள்ளப்படுகிறது! இது பெற்ற தந்தைக்கும் மகனுக்குமிடையில் உள்ள பிரிவு.

பெற்ற தந்தைக்கும் மகனுக்கு மிடையிலேயே இப்படியாஞல் பாதுகாவலஞக இருக்கும் ஒரு அன்னியன் நியாயத்துடன் விலகிக் கொள்ளவிரும்பவில்லையென்ருல் அவனுக்குக் கிடைப்பது என்னகும்?

எமது ஈழத் தமிழ் நாட்டில் சிங்களவன் ஆதிக்கம் செலுத்துவதும் இப்படித்தான்! வெள்ளையன் அமர்த்திவிட்டுப்போன பாதுகாவலன் அவன் தமிழ் மக்களை அடிக்கிருன். அடிக்குமட்டும் அடித்து விட்டான். தமிழ்க் குடும்பத்தில் அன்னியன் ஒருவன் தலையிடுகிருன்.

வளர்ந்துவிட்ட தமிழ் மக்கள், எல்லாவற்றையும் உணர்ந்துவிட்ட தமிழ் மக்கள், அடி வாங்கி வாங்கி அலுத்துவிட்ட அந்த மகனைப்போல் பாடம் புகட்டிவிட்டு தனிக் குடித்தனம் செய்வதில் தவறில்லை அல்லவா?

"திருகோணமலையை கட்டியாள்பவர்கள், இந்துமா சமுத்திரத்தையே கட்டியாளுவார்கள் என்பது மாவீரன் நெப்போலியனின் கூற்று. இக்கூற்றை ஜிம்மி கார்ட்டரும், 'பிரஷ்நேவ்' அவர்களும் கவனத்துக்கு எடுப்பார்களாக!

## தொழிற்சங்கக் கூட்டணி பிரதமருக்கு முறைப்பாடு!

கல்குடாத்தொகுதியில் பொதுத்தேர்தலையடுத்து நடைபெற்ற வன்செயல்களின் போது கிழக்கிலங்கை கடதாசி ஆலைக்கூட்டுத்தாபனத்தைச்சேர்ந்த ஊழியர்கள், நிர்வாகிகள் சிலர் தாக்கப்பட்டதாக சொல்லப்படும் புகார்பற்றி உடன் விசாரணை நடத்துமாறு தமிழ் தொழிற்சங்கக்கூட்டணி செயலாளர் நாயகம் திரு. ஐ. தி. சம்பந்தன் பிரதமர் ஜே. ஆர். அவர்களுக்கு எழுதியுள்ளார்.

## அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு!

தமிழ்தொழிற் சங்கக்கூட்டணியின் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு 27-8-77ல் நடைபெறும்.


செல்லமகால்



3 வது ஜனத்திரள் வாரம்

எம். ஜி. ஆர்., லதா, அறிமுகம் பவானி, தங்கவேலு-நாகேஷ் நடித்த—

உழைக்கும் கரங்கள்

கெயிட்டி




5-வது வாரம்

ஜெய்சங்கர், சீனிவாசன், ஸ்ரீகாந்த் சுஜாதா, ஸ்ரீப்ரியா, மனேரமா நடித்த

நீ ஒரு மகாராணி

கிங்ஸ்லி 2-வது வாரம்

சிவாஜி கணேசன், கமலஹாசன், தேவிகா, மஞ்சுளா, ஜெயசித்ரா மற்றும் பலர் நடித்த

சத்யம்

(கலர்)

5-வது வாரம்

லிடோ (யாழ் நகர்)

சுஜாதா, ஜெய்சங்கர் நடித்த-

நீ ஒரு மகாராணி

கெப்பிட்டல்

சிவாஜி-சிவகுமார், லட்சுமி

- நடித்த -

காவல் தெய்வம்

வெலிங்டன் (யாழ்நகர்) 5-வது வாரம்

விஜயகுமார், ஜெயசித்ரா, ஏ.வி.எம். ராஜன், நாகேஷ் நடித்த

தாயில்லாக் குழந்தை

(கலர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை ஜிரேசன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டாரால் கொழும்பு-12, பண்டாரநாயகா வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1977-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 14-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.